# தமிழர் பொருண்மியம்

வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 100/= இதழ் - 96 09.02.2025




# அதிக லாபம் தரும் திலாப்பியா மீன் வளர்ப்பு முறை

மத்திய வங்கியின் (OPR) ஓரிரவு கொள்கை வீதக் குறைப்பின் வரி கொள்கை தாக்கங்கள் 10

இலங்கையின் ஈரநிலங்கள் 13

எரிபொருள் வளங்கள் 17

வணிகத்தைப் புரிந்துகொள்வது 07

பொருளாதாரம் | சுற்றுலாத்துறை | வணிகம் | தொழில் முனைவு | விவசாயம்

# அதிக லாபம் தரும் திலாப்பியா மீன் வளர்ப்பு முறை

ஆனந்தன் பிரேம்நாத்
லக்சி பண்ணை

அதிக லாபம் தரும் தொழில்களில் கிப்ட் திலாப்பியா என்று சொல்லப்படும் கோல்டன் மீன் வளர்ப்பும் ஒன்று

எமதுநாட்டினைபொறுத்தவரைவெவ்வேறு மாவட்டங்களில் இவைகளுக்கு ஜிலேபி, கோல்டன், ஜப்பான், செப்பலி, செல்வன், குறளி, என பல பெயர்கள் கொண்டு அழைக்கப்படுகின்றது.

நன்னீர் மீன் வளர்க்க இந்த மாதம் பொருத்தமான மாதமாகும்.

கிப்ட் திலாப்பியாவினை பொறுத்தவரை நன்னீர் மற்றும் உவநீர் என இரண்டு முறைகளில் வளர்க்கக்கூடிய குஞ்சுகளும் உள்ளது.

மீன் பண்ணை அமைப்பதற்கு இடம் தேர்வுசெய்யும்போது பல்வேறு காரணிகளைக் கருத்தில் கொண்டால் , குறைந்த செலவில் தரமான மீன் வளர்ப்புக் குளங்களை அமைத்துக்கொள்ளலாம்.

### மீன் பண்ணைக்குரியக் காரணிகள்

குளம் அமைக்கத் தகுதியான இடம். பாறைகள் இல்லாமல், அதிக மேடு பள்ளங்கள், தாவரங்களின்றி, சமமான சிறிதளவு சாய்தளத்தோடு இருத்தல் நல்லது. மண்ணின் கார அமிலத்தன்மை (ணேகூழி) 6.5 முதல் 8.00 வரை இருக்கும் நிலங்கள்,

குளம் அமைக்கத் தகுதியான இடம் நீரைத் தேக்கி வைக்கும் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும். களிமண், வண்டல்மண், மணல் ஆகியன கலந்த மண் வகை கொண்ட நிலம், மீன் பண்ணை அமைக்கச் சிறந்தது.

களியின் அளவு மிகக்குறைவாக உள்ள நிலங்களில், நீர்க்கசிவு மூலம் நீர் இழப்பு அதிக அளவு ஏற்படும். எனவே சுமார் 30 முதல் 40 சதவீதம் களித்தன்மையுடைய நிலம், மீன் பண்ணைகள் அமைக்க ஏற்றது.

எனவே தாழ்வான நிலப்பகுதியில் நீர் தேங்கும் நிலங்கள், களர் நிலம், களர் மற்றும் உவர் மண் தன்மை கொண்ட நிலங்களையும். மீன் வளர்ப்பிற்கு பயன்படுத்தலாம் மீன் வளர்ப்பிற்குத்தேவையானநீர்ஆதாரங்களான ஆறுகள், குளங்கள் மற்றும் நல்ல தரமான நிலத்தடி நீர்வளம் கொண்ட பகுதிகள் மீன் வளர்ப்பிற்கு ஏற்றவை.

மீன் பண்ணைக்கான நீர் ஆதாரம் ஏரி, குளம், மற்றும் ஆறு போன்றவைகளாக இருப்பின் குறைந்த பட்சம் அவற்றிலிருந்து 6 மாத காலத்திற்கு நீர் குறையாமல் கிடைக்குமாறு இருத்தல் நல்லது. நீரை வடிப்பிற்குத்தேவையான வடிகால் வசதிகளும், பண்ணையாளர்கள் நடந்து செல்வதற்குரிய பாதை வசதிகள் உள்ள இடமாக இருந்திடல் வேண்டும்.

குறிப்பிடப்பட்ட தகுதிகளில் ஏதேனும் குறைந்திருப்பின், சற்றுக்கூடுதல் செலவுகள் செய்ய வேண்டி ஏற்படும், ஆகையால் அத்தகைய இடங்களில் கூடுதல் செலவு செய்து மீன் பண்ணை அமைக்க வேண்டி வரும்.



### மீன்குளங்களின் அமைப்பு

மீன் வளர்ப்புக் குளத்தைக் குறைந்தது ¼ ஏக்கர் (1000 ச.மீ) பரப்பிலாவது அமைத்தால், இலாபகரமாக மீன் வளர்ப்பை மேற்கொள்ளலாம்.

மீன் வளர்ப்புக் குளங்கள் ஆனது முடிந்தவரை செவ்வக வடிவத்தில் இருக்க வேண்டும்.

உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப சுமார் 1/4 ஏக்கர் முதல் 2 ஏக்கர் கொண்டவைகளாக அமைத்துக் கொள்ளலாம்.

குளங்களை சதுர வடிவில் அமைக்கும் போது, அமைக்க வேண்டிய கரையின் நீளம் குறைகிறது. இருப்பினும், மீன்களை எளிதாக அறுவடை செய்வதற்கு, செவ்வக வடிவ குளங்களே ஏற்றவை.

### மீன்குள உருவாக்கம்:

பெரும்பாலான பண்ணைகளில் மீன் வளர்ப்புக் குளங்கள், மண்ணை தோண்டி அம்மனைக் கொண்டு கரை ஓரமான வன்டு ( பாதை) அமைக்கப்பட்ட குளங்களாகவே உள்ளன.

இத்தகைய ஒரு ஏக்கர் குளம் அமைத்து சுற்றிவர பூற்கள் வளர்த்து எடுக்க சுமார் 1500,000 முதல் 1800,000 இலங்கை ரூபா வரை செலவாகிறது. இத்தகையக் குளங்களின் பயன் என்னவெனில், பிற்காலத்தில் மீன் வளர்ப்புத் தொழிலைத் தற்காலிகமாக மாற்ற நினைத்தால், கரை மண்ணை குளத்தினுள் நிரப்புவதன் மூலம், விவசாய நிலமாக மாற்றிவிடலாம்.

### மீன்குளக்கரை

குளத்தின் கரை அமைக்கும் போது, கரையின்( வன்டு ) உயரத்தை, குளத்தில் தேக்க இருக்கும் அதிகபட்ச நீர் மட்டத்தை விட, குறைந்த பட்சம் 3 அடி உயரம் அதிகமாக இருக்குமாறு அமைத்திட வேண்டும்.

குளம் வெட்டும் போது, கரையின் பக்கச்சரிவுகளை மண்ணின் தன்மைக்கேற்ப கரையின் உயரம் மற்றும் சாய்தளத்தின் உயரத்தினை செங்குத்தாக இல்லாமல் முடிந்தவரை சாய்த்தாலமாக அமைக்க வேண்டும்.

உதாரணமாக கரையின் அடிப்பகுதி 20 அடி அகலத்தில் இருந்தால்.

கரையின் மேற்பகுதியின் அகலம் 10 அடிக்கும் குறைவாக இருக்க வேண்டும்.

குளத்தின் ஆழம் உங்கள் தேவைக்கு ஏற்ப அமைத்துக் கொள்ளலாம் ஆனால் கட்டாயம் குளத்தில் உள்ள நீர்மட்டத்தின் ஆழம் குறைந்தது 5 தொடக்கம் 6 அடி வரை இருக்க வேண்டும்.

பெரும் பண்ணைகளில் சற்று அதிக பரப்பளவில் மீன் பண்ணைகளை அமைக்கும் போது, மீன் வளர்ப்புக்குளம்(இருப்புக்குளம்) மட்டுமின்றி, நுண் மீன்குஞ்சு வளர்ப்புக் குளமும்,

இளம் மீன் குஞ்சுகள் வளர்ப்புக் குளம். என பண்ணைகளில் வெவ்வேறாக அமைத்துக் கொள்ளலாம்.

### மீன்வளர்ப்புக் குளம்

மீன்களை குளங்களில் இருப்புச் செய்வதற்கு முன், குளங்களை முறைப்படி தயாரிப்பது, மீன் வளர்ப்பில் இன்றியமையாத ஒரு அடிப்படைப் பணியாகும்.

மீன் வளர்ப்புக் குளங்களில் அதிக உற்பத்தியைப் பெறுவதற்குப் பண்ணை மேலாண்மை எந்த அளவுக்கு முக்கியமோ, அந்த அளவிற்குக் குளங்களை முறையாகத் தயார் செய்தலும் முக்கியமாகும்.

அதாவது குளங்களைக் காயவிடுதல், வேர்கள் மற்றும் பெரிய கற்களை அகற்றுதல்

அதன் பின் முடிந்தால் சுண்ணாம்பு கற்களை தூவி விடுதல்

பின்னர் குளத்திற்கு அடியுரமாகச் சாணம் அல்லது கோழி எரு ஒரு ஏக்கருக்கு ஐந்து டன் வரை இடலாம்.

முடிந்தவரை உலர்ந்த சாணத்தைவிட ஈரமான சாணம் மேலானது.

கோழி எருவைப் பொறுத்த மட்டில் மக்கிய ஆழ்கூள எரு (ம்ளளஸ்ரீ ஸிஷ்மிமிளஷ) நல்லது.

அதோடு குளத்தில் உள்ள நீரானது கலங்கிய நிலையில் இருக்காமல் நன்றாக தெளிந்த நிலையில் இருக்க வேண்டும்.

அப்போதுதான் மீனின் வளர்ச்சி வேகமாக இருக்கும்.

### மீன்குஞ்சுகள்:

மீன் குஞ்சுகளை அரசாங்கத்திடம்

இருந்தோ அல்லது அங்கீகாரம் பெற்ற தனியார் நிறுவனங்களிடம் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

இக்குஞ்சுகளையும் இரண்டு வகைகளில் பெற்றுக் கொள்ளலாம்

1. ஆண் பெண் என இரண்டும் கலந்த குஞ்சுகள்

2. ஹார்மோன் மாற்றம் செய்யப்பட்ட ஆணும் இல்லாத, பெண்ணும் இல்லாத குஞ்சுகள் மட்டும்.

கிராமங்களில் உள்ள பெரிய அளவிலான பொது குளங்களாக இருந்தால் அதில் ஆண், பெண் என இரண்டையும் கலந்த குஞ்சுகளை விடலாம் எதிர்காலத்தில் அவைகளே இனவிருத்தி செய்து மீன் இனம் பெருக வாய்ப்பு உள்ளது.

தனியார் பண்ணைகளில் தனி ஒருவரால் லாப நோக்கத்திற்காக அமைக்கப்பட்ட குளமாக இருந்தால் ஹார்மோன் மாற்றப்பட்ட குஞ்சுகளை மட்டுமே இருப்பு செய்து வளர்க்க வேண்டும்

மீன்குஞ்சுகளைப் பொறுத்தமட்டில், கொள்வனவு செய்யும் போது குறைந்தபட்சம் 1.5- 2.5 அங்குல நீளம் வளர்ந்தவையாக இருத்தல் நல்லது.

ஒரு ஏக்கருக்கு 20000 குஞ்சுகள் வரை விடலாம். குஞ்சுகளின் எண்ணிக்கை எந்த அளவிற்கு குறைவாக இருக்கின்றதோ அந்த அளவிற்கு மீனின் வளர்ச்சி அதிகமாக இருக்கும்.

5 தொடக்கம் 6 மாத காலம் சிறந்த முறையில் வளர்க்கப்பட்டால்

சாதாரணமாக 25 முதல் 30 செ.மீ நீளத்தையும் சுமார் 750 முதல் 1500 கிராம் எடையையும் அடைந்துவிடும்.

**மீன்குஞ்சுகளின் நிலை**

மீன் குஞ்சுகளை வாங்கும்போது, நல்ல தரமான குஞ்சுகளைப் பார்த்து வாங்குதல் வேண்டும். உடல்ஊனம், வெளிப்புறகாயங்கள், செதில்கள் இழந்து இருத்தல், சுறுசுறுப்பின்மை, மெலிந்த நிலை ஒட்டுண்ணிகள் இருத்தல் போன்ற அறிகுறிகளுடன் காணப்படும் மீன் குஞ்சுகளை தவிர்க்க வேண்டும்.

**குஞ்சுகளின் வளர்ப்பு முறை**

வெளியிடங்களில் இருந்து பெறப்பட்ட மீன் குஞ்சுகளை, மிதமான வெப்பம் நிலவும் காலை, மாலை, முன் இரவு வேலைகளில் உங்கள் குலத்திற்குள் விடுவது நல்லது.

அதேவேளை வாங்கும் குஞ்சுகளை, உடனே குளங்களில் விடாமல், அவற்றை நமது நீர்நிலையில் வட்டமாக வளைகள் கட்டி அதனுள் 30 நாட்களுக்கு அல்லது. குறைந்தது 15 நாட்கள் சிறந்த முறையில் எமது நேரடி கண்காணிப்பில் பராமரித்து சுழலுக்கு இணங்கச் செய்தல் வேண்டும்.

15 நாட்களுக்கு பின்னர் குஞ்சுகளை நிரந்தரமாக இருப்புச் செய்தல் வேண்டும்.

குஞ்சுகளை எமது குளத்தினுள் விட்ட முதல் மாதத்திற்கு. ஒவ்வொரு நாளும் இரண்டரை அல்லது மூன்று மணி நேரத்திற்கு ஒரு தடவை அதாவது நாளொன்றுக்கு காலையில் 6:00 மணி தொடக்கம் மாலை 6:00 மணி வரை 4 அல்லது 5 தடவைகள் 35% க்கும் அதிகமான புரோட்டின் உள்ள மிதக்கும் தீவனத்தினை கட்டாயம் கொடுக்க வேண்டும்.

இரண்டாவது மாதத்தில் நாள் ஒன்றுக்கு காலை, மதியம், மாலை, என மூன்று தடவை

30% மான புரோட்டின் உள்ள மிதக்கும் தீவனத்தினை கட்டாயம் கொடுக்க வேண்டும்.

ஆகவே முதல் இரண்டு மாதத்திற்கு நீரின் உள். தாழும் தீவனத்தினை கொடுக்காமல் மிதக்கும் தீவனத்தினை மட்டும் கொடுக்க வேண்டும்.

காரணம் முதல் இரண்டு மாதத்தில் ஏற்படும் மீனின் வளர்ச்சியே அடுத்தடுத்து மாதங்களில் அதிக இடை வைப்பதற்கு உதவியாக இருக்கும்.

மூன்றாவது மற்றும் நான்காவது மற்றும் ஐந்தாவது மாதங்களில் தீவனச் செலவினை கட்டுப்படுத்துவதற்காக மிதக்கும் தீவனத்தோடு நீரின் உள் தாளும் தீவனத்தையும் சேர்த்துக் கொடுக்கலாம்.

மீன் குஞ்சுகளுக்கு அளிக்கும் தீவனத்தில் அதன் இடையில் ஏழு வீதத்தினை நாளாந்த உணவாக கொடுக்க வேண்டும்.

ஆகையால் ஒவ்வொரு10 அல்லது 15 நாட்களுக்கு ஒரு தடவை மீன் குஞ்சுகளின் இடையினை கனித்து தீவனத்தினை கொடுத்து வர வேண்டும்.

நண்ணீர் மீன் இனங்களில் ஒரு சில மீன் இனங்கள் மட்டுமே அனைத்து வகையான உணவுகளை எடுத்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும். அந்த வகையில் கிட்ட்திலாபியாவும் ஒன்று.

ஆகவே ஏனய மீன் வளர்ப்பினை விட இம் மீன்களுக்கு பராமரிப்பு செலவு குறைவாக இருக்கும்.

**முதலீடு**

மேற்குறிப்பிட்டது போன்று ஒரு ஏக்கரில் நிரந்தரமாக குளம் அமைக்க 18 லட்சம் ரூபாய் தேவைப்படும்.

இது நிரந்தரச் செலவாக இருக்கும்.

இடத்திற்கு ஏற்ப இச்செலவில் சிறிய மாற்றம் ஏற்படும்.

ஒருஏக்கருக்கான 20,000 மீன்குஞ்சுகளை கொள்வனவு செய்வதற்கு. போக்குவரத்து செலவு உட்பட 150,000 /= ரூபாய் தேவைப்படும்.

20,000 மீன்குஞ்சுகளையும் 6 மாதத்திற்கு பராமரிப்பதற்கு தேவையான செலவாக 2,500,000 /= தேவைப்படும்.

மேற்குறிப்பிட்ட தீவனச்செலவினை செய்தால் மட்டுமே ஒரு மீனின் சராசரி இடை ஒரு கிலோ வரை வரும்.

**சந்தைப்படுத்தல்**

எனவே மேலே குறிப்பிட்டுள்ள அளவுகளில் உள்ள மீன் குஞ்சுகளைக் குளங்களில் இருப்புச்செய்த நாளிலிருந்து 150 நாட்களுக்குப் பிறகு அதாவது 5 மாதத்தில் இருந்து 6 மாதத்திற்குள் விற்பனை செய்து விட வேண்டும்.

சாதாரணமாக சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வளர்க்கப்பட்ட இம்மீனானது ஐந்து தொடக்கம் ஆறு மாதத்தில் 800 கிராம் தொடக்கம் 1000 கிராம் வரையிலான நிறையினை எட்டிவிடும்.

இலங்கையில் பல மாவட்டங்களிலும் சாதாரணமாக நன்கு வளர்ந்த திலாபியா மீனினை மொத்த வியாபாரிகள் 650 தொடக்கம் 700 ரூபாய் வரை கொள்முதல் செய்கின்றார்கள்.

ஆகவே ஒரு ஏக்கரில் 20000 மீன்களை வளர்த்தெடுத்தால் ஐந்து மாதத்திலிருந்து ஆறு மாதத்திற்குள் குறைந்தது 17,500 கிலோ மீனை அறுவடை செய்யலாம்.

$700 \times 17500 = 12250000$/= ரூபாய் என்ற அடிப்படையில் எமக்கு கிடைக்கும். இதிலிருந்து மொத்த செலவினத்தினை கழித்து வருவது எமக்குரிய தேறிய லாபமாக இருக்கும்.

இந்த வருமானத்தினை பெறுவதாக இருந்தால் மீன்தட்டுப்பாடான காலபகுதிகளில் வளர்க்க ஆரம்பித்து அதே காலத்திற்குள் அறுவடை செய்ய முற்பட வேண்டும். அதோடு முழு முயற்சியோடும் அர்ப்பணிப்போடும் செயல்பட வேண்டும்.

அதோடு ஒரு மீனின் இடை 750 கிராமுக்கு அதிகமாக இருந்தால் மட்டுமே வியாபாரி மேற்கூறிய தொகைக்கு கொள்வனவு செய்வார்.

ஒரு மீனின் எடை 500 கிராமுக்கு குறைவாக இருக்குமாக இருந்தால் 300, 400, 500 ரூபாய் போன்ற விலைகளுக்கு கொள்வனவு செய்வார்கள்.

ஆறு மாதத்திற்கு பிறகு மீன்களைக் உங்கள் பண்ணைகுளத்தினுள் வைத்திருக்கக் கூடாது. காரணம் அதன்பிறகு அதிக செலவினத்தை ஏற்படுத்தும் அதோடு ஆறு மாதத்திற்கு பிறகு அதன் வளர்ச்சி மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இருக்கும் ஆகவே எமக்கு நட்டத்தினை ஏற்படுத்தி விடும்.

எமது பண்ணையான லக்சி பண்ணையில் (Laxci Farm) மேற்குறிப்பிட்ட முறைகளையே பின்பற்றி உற்பத்தி செய்து வருகின்றோம்.

எனவே, மீன் வளர்ப்பிற்குத் தேவையான நீர் கிடைக்கும் கால அளவு, விற்பனைக்கான வாய்ப்புகள் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு, வளர்ப்புக் காலத்தை நிர்ணயிக்க் வேண்டும்.

எந்த ஒரு உற்பத்தியாளனும் சந்தை வாய்ப்பினை பற்றி சிறிதும் ஐயம் கொள்ளத் தேவையில்லை அனைத்து மாவட்டங்களிலும் இம்மீனுக்கான கேள்வி. வியாபாரிகள் மத்தியில் அதிகமாகவே உள்ளது.

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி :+94(77)2034807 +94 (77) 776 9751

# நெல் விலை நிர்ணயம்

**நெல் உற்பத்தி செலவுகள் அதிகமாகவும், உரம் மற்றும் பிற உள்ளீடுகள் காரணமாக அறுவடை செலவுகள் வேகமாக அதிகரித்துள்ளதால், அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட நெல் உத்தரவாத விலை எந்த வகையிலும் போதுமானதாக இல்லை என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்**

**தற்போது ஒரு கிலோ நெல் உற்பத்தி செய்ய 100- 110 ரூபாய் வரை செலவாகிறது என்றும், தற்போது விவசாயிகள் விதை நெல், உரம், எண்ணெய், பூச்சிக்கொல்லிகள், களைக்கொல்லிகள் மற்றும் நெல்லை அறுவடை செய்து விற்பனை செய்வதற்கு அதிக விலை கொடுக்க வேண்டியிருக்கிறது.**

**ஆனால் அரசின் தற்போதய நிர்ணய விலை நாட்டு நெல்லுக்கு கிலோவுக்கு 120 ரூபாயும், சம்பா நெல்லுக்கு 130 ரூபாயும் , கீரி சம்பா நெல்லுக்கு 132 ரூபாயும் உத்தரவாத விலையாக நிர்ணயிக கப்பட்டுள்ளது.**

**இந்த விலைகள் போதுமானதாக இல்லை. ஏனென்றால், இன்றைய பொருளாதார நிலைமையைக் கருத்தில் கொண்டு, விவசாயம் செய்யும்போது அதைப் பயன்படுத்துவது ஒரு பெரிய செலவாகிவிட்டது. ஒரு தேங்காய் வாங்குவதற்க்காக இரண்டு கிலோ அரிசி கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். என்று தெரிவித்தனர்.**

**நெல்லின் விலை அதிகரித்தால் அரிசியின் விலை அதிகரிக்க வாய்ப்புகள் இருக்கிறது தற்போது அடிப்படை தேவையான அரிசியை வாங்குவதற்கு மக்கள் மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர். இன்னும் விலை அதிகரித்தால் அன்றாடம் மக்களின் வாழ்வு திண்டாட்டம் தான் .**

# ஆட்டுப் பண்ணை தோல்விக்கான காரணங்கள்

**ஆனந்தன் பிரேம்நாத்**
**லக்சி பண்ணை**

1. கொட்டகைக்கு அதிகம் முதலீடு செய்து விட்டு.

ஆடுவாங்கபணப்பற்றாக்குறையால் குறைந்த விலையில் அல்லது குறைந்த எண்ணிக்கையில்ஆடுகளைகொள்வனவு செய்வது.

2. ஆடுகள்வளர்க்கதிட்டமிடும்போது கொட்டகைஅமைப்பதற்கு33வீதத்திற்கும் குறைவான பணத்தையும்.

ஆடுகளுக்காக 66 வீதத்திற்கு மேற்பட்ட பணத்தை செலவு செய்ய வேண்டும் என்று அறியாமல் முதலீடு செய்வது.

3. பேப்பர் கணக்கீடு வைத்து இலாபம் பற்றிய பெரிய எதிர் பார்ப்புடன் முதலீடு செய்வது.

4. நேரடி கள அனுபவம் இன்றி. அதாவது முன்னனுபவம் இன்றி மற்றவரைப் பார்த்து முதல் தடவையில் அதிக முதலீடு செய்வது.

5. ஆடு வளர்ப்பில் ஈடுபட்டால் 8 தொடக்கம் 10 மாதத்திற்கு பின்பே லாபம் கிடைக்கும் என்பதனை அறியாமல்.

பண்ணை ஆரம்பித்த உடனே அதிக இலாபம் வரும் என்ற அதீத நம்பிக்கை.

6. ஆட்டுப் பண்ணை அமைத்து அனுபவம்பெற்றபண்ணையாளர்களின் ஆலோசனை பொறாமல். தற்பெருமை கொண்டு சரியான பயிற்சி இன்றி பண்ணை தொடங்குதல்.

7. தங்களுடைய இடத்திற்கேற்ப வளரக்கூடிய ஆடுகளை விடுத்து. தற்பெருமையில் வெவ்வேறு வகையான ஆடுகளை தேர்வு செய்தல்.

8. ஆடுகளை கொள்வனவு செய்ய துவங்கும்போது எந்தெந்த மாதங்களில் ஆடுகளைகொள்வனவுசெய்யவேண்டும் என்ற அறிவின்மை.

9. தாய்ஆடுகள்தேர்வுசெய்வதில் ஏற்படும் தோல்வி.

10. எங்கள் சூழலுக்கு தாக்குப்பிடித்து வளரக் கூடிய ஆட்டு இனங்களை தேர்வு செய்யாமல் உயர்ரக ஆடுகளை தேர்வு செய்தல்.

அதோடு விலைகூடிய ஆடுகளை கொள்வனவு செய்தல்.

11. ஒவ்வொரு ஆடுகளுக்கும் குறிப்பேடு இல்லாமல்

ஆடுகளின் அன்றாட செயற்பாடுகளை கவனிக்காமல் வளர்த்து வருவது.

12. மேய்ச்சல்முறையில்வளரக்கூடிய ஆடுகளை அடைப்பு முறையிலும்.

அடைப்பு முறையில் வளர்க்க கூடிய ஆடுகளை மேய்ச்சல் முறையிலும் வளர்க்க முற்படுதல்.

13. ஆடு வாங்குதல், விற்றலில் உள்ள இயல்பான வர்த்தக நுணுக்கம் இல்லாமை.

14. அதிக செலவு செய்து கொட்டகை அமைத்தும். கொட்டகை அமைப்பு நுணுக்கம் தெரியாமல் வெவ்வேறு வகையான பிழைகளை விடுதல்.

15. ஒருங்கிணைந்த பண்ணை என்ற பெயரில் ஆட்டுக்கொட்டகை அருகே மாடுகளையும் கோழிகளையும் வளர்க்க முற்படுதல்.

16. மேய்ச்சலுக்கு செல்லும் ஆடுகள் எப்போதும் மதியத்திற்கு பின்பே அதிக அளவில் உணவினை உட்கொள்ளும் என்ற போதிய அனுபவம் இல்லாமல் ஆடு பார்ப்பவரின் அவசரத்திற்காக ஆடுகளை நேரத்தோடு சாய்த்து வருதல்.

ஆட்டுபண்ணைஅமைத்தவர்களில். தோல்வி அடைந்தவரின் எண்ணிக்கை மிகமிககுறைவுஇருப்பினும்இதுபோன்ற வெவ்வேறுதவறுகளால்ஆட்டுப்பண்ணை தோல்வி அடைவதற்கு காரணமாக அமைகின்றது.






**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 215,750.00 ரூபா.**

**24 கரட் தங்கம் 235,300.00 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**




**கேள்வி -** எந்தெந்த மாதத்தில் என்னென்ன காய்கறிகள் பயிரிட வேண்டும் என்று சொல்ல முடியுமா?

**பதில் -** ஜனவரி: (மார்கழி - தை)

1) கத்தரி, 2)மிளகாய், 3)பாகல், 4) தக்காளி, 5) பூசணி, 6)சுரை, 7) முள்ளங்கி,8) கீரைகள். 9) பயிற்றை 10) பயறுவகை

பிப்ரவரி: (தை - மாசி)

1) கத்தரி, 2)தக்காளி, 3) மிளகாய், 4)பாகல், 5) வெண்டை, 6)சுரை, 7) கொத்தவரை, 8)பீர்க்கன், 9) கீரைகள், 10)கோவைக்காய்.

11) பயறுவகை

மார்ச்: (மாசி - பங்குனி)

1)வெண்டை, 2)பாகல், 3)தக்காளி, 4)கோவை, 5)கொத்தவரை, 6) பீர்க்கன். 7) பயறு 8)பயிற்றை

ஏப்ரல் : (பங்குனி - சித்திரை)

1)கொத்தவரை, 2) வெண்டை.

மே: (சித்திரை - வைகாசி)

1) கத்தரி, 2)தக்காளி, 3)கொத்தவரை.

ஜுன் : (வைகாசி - ஆனி)

1) கத்தரி, 2)தக்காளி, 3)கோவை, 4)பூசணி,5) கீரைகள், 6)வெண்டை.7) செடி முருங்கை

ஜுலை: (ஆனி -ஆடி)

1) மிளகாய், 2)பாகல், 3)சுரை, 4) பூசணி,5) பீர்க்கன், 6)முள்ளங்கி, 7)வெண்டை, 8)கொத்தவரை, 9) தக்காளி.

ஆகஸ்ட்: (ஆடி - ஆவணி)

1) முள்ளங்கி, 2)பீர்க்கன், 3)பாகல், 4) மிளகாய், 5)வெண்டை, 6)சுரை..

செப்டம்பர்: (ஆவணி - புரட்டாசி)

1) கத்தரி, 2)முள்ளங்கி, 3)கீரை, 4)பீர்க்கன், 5)பூசணி.

அக்டோபர்: (புரட்டாசி - ஐப்பசி)

1)கத்தரி, 2)முள்ளங்கி.

நவம்பர் : (ஐப்பசி - கார்த்திகை)

1)செடிமுருங்கை, 2)கத்தரி, 3) தக்காளி, 4)முள்ளங்கி, 5)பூசணி.

டிசம்பர் : (கார்த்திகை - மார்கழி)

1)கத்தரி, 2)தக்காளி.

இத்தகவலானது இலங்கை மற்றும் தென்னிந்திய காலநிலைக்கு மட்டும் பொருந்தக் கூடியதாகும்

**உங்கள் கேள்விகளை**

**தமிழர் பொருண்மியம்,**
**கிறீன் மீடியா ஹவுஸ்,**
**68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.**
**என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.**
**வாட்ஸ் அப் முகவரி +94(77)2034807**
**+94 (77) 776 9751**




| | |
|---|---|
| கத்தரிக்காய் | 320/= |
| உருளைக்கிழங்கு | 80/= |
| பச்சை மிளகாய் | 1150/= |
| தக்காளி | 300/= |
| மரவள்ளிக்கிழங்கு | 250/= |
| கோவா | 200/= |
| கரட் | 400/= |
| வாழைக்காய் | 200/= |
| சின்ன வெங்காயம் | 450/= |
| பாகற்காய் | 485/= |
| வெண்டிக்காய் | 230/= |
| பயற்றங்காய் | 240/= |
| பீற்றூட் | 580/= |
| முருங்கைக்காய் | 900/= |
| தேங்காய் | 165/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 182/= |
| கனடா டொலர் - | 201/= |
| சீன யுவான் - | 37/= |
| யுரோ - | 305/= |
| ஜப்பான் யென் - | 1.8/= |
| சிங்கப்பூர்டொலர் - | 216/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 347/= |
| சுவிஸ் பிராங் - | 321/= |
| அமெரிக்க டொலர் - | 294/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 192/= |
| கனடா டொலர் - | 210/= |
| சீன யுவான் - | 42/= |
| யுரோ - | 318/= |
| ஜப்பான் யென் - | 1.9/= |
| சிங்கப்பூர் டொலர் | 226/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 368= |
| சுவிஸ் பிராங் - | 336/= |
| அமெரிக்க டொலர் - | 302/= |

# எங்கட ஆச்சி



காரைக்கவி கந்தையா பத்மானந்தன்

காலமை வாரப்பத்திரிகை ஒண்டுக்கு பத்தி ஒண்டை எழுதிக்கொண்டு இருக்கேக்கை ஐயோ இந்த அநியாயத்தைப் பாருங்கோ எண்டபடி வீட்டம்மா ஓடியந்தா....

விடியக்காலத்தாலயே இதென்னடா கோதாரிஎண்டுநெச்சபடிஎன்ன...என்ன..ஏன் இப்பிடி ஓடியாறாய் எண்டன்....

ஒண்டும் பேசாம இப்பிடி எனக்குப் பின்னால வாங்கோ எண்டா.

அவவுக்குப் பின்னால போறுதுதானே என்ரை வேலை எண்டபடியால பேசாமப் போனன். இப்பிடிப் பின்னால போகேக்கை தொணதொணத்தா அவவுக்குப் பிடிக்காது. பேந்து ஒரு பாவமும் செய்யாத என்ரை அப்பு ஆச்சியெல்லாம் அவவிட்டைப் பேச்சு வாங்கவேண்டி வரும்...

கூட்டிக்கொண்டு போனவை சாத்திக்கிடந்த மகளின்ரை அறைக்கதவுக்குப் பக்கத்தில போய்நிண்டு கொண்டு வாயை மூடிக்கொண்டு கதவிலை காதைவைச்சுக் கேக்கச்சொல்லிச் சைகை செய்தா.. கேட்டா உள்ளுக்கு ஒரு பெடியும் பெட்டையும் செல்லம் பொழிஞ்சு கெக்கே பெக்கே சிரிச்சுக்கதைக்கிறது கேக்குது. எனக்கெண்டாப் புண்ணில் புளிபத்தினமாதிரிப் பொத்திக்கொண்டு வந்திச்சு...

வீட்டம்மா நான் இதில வாசலில புளியங்கொட்டை மாதிரி இருக்கிறன். எனக்குத் தெரியாம ஆரோ ஒருத்தன் வந்து அறையுக்கை போயிருக்கிறான். என்னண்டு போனான் எண்டு தெரியேல்லையே எண்டு குசுகுசுத்தபடி கண்ணைக் கசக்கினா.

நான் கொஞ்சம் பொறு எண்டுபோட்டு போய் குசினியுக்கை போய் மிளகாய்த்தூள்ப் போத்திலை கொண்ணந்து மூடியைத் திறந்து போட்டு வீட்டம்மாட்டைக் குடுத்தன்.

பேந்து விளக்குமாறு ஒண்டை எடுத்துக்கொண்டு வந்து அப்பாற்மென்றில அடுத்த வீட்டில என்ன கதைக்கினம் எண்டு சுவரில காதை வைச்சுக் கொண்டு நிக்கிற மாதிரி கதவோடை ஒட்டி நிண்டு கொண்டன்...



உள்ளுக்கு

ஆண் குரல்...‘நம்ம ரைம் வந்திருச்சு..வைச்சு செஞ்சிருவன்...ஓகேயாடி...’

‘பெண் குரல்...ஆ.. செஞ்சிருவியா..ஓகேடா... ரைம்..பாசாயிடுமில்ல. .செமையா.செஞ்சிருவமாடா...ஆ...ஆ.. ஹீ...ஹீ...’

‘ஆண்குரல்..ரொம்ப இம்பறஸ் பண்றியேடி...பட்...ஓஹோ....ஓஹோ...ஹோ...’

எனக்கு வந்த கோவத்துக்கு கதவைத்தள்ளிக்கொண்டுவிளக்குமாத்தோட கதவு நிலை காலிலை இடிச்சதையும் பறுவாய் பண்ணாமப் பாய்ஞ்சா அங்கை ஒருத்தரையும் காணேல்லை.

ரேடியோவில அந்தப் பொம்பிளைக்குரல் நம்ம சோ முடிச்சிது..பாய்....பாய்...அதுவரை ஒரு நல்ல பழைய சோங் போடுறம் லிசின் பண்ணி நல்லா எஞ்சோய் பண்ணுங்க எண்டது...

## தமிழர் பொருண்மியத்தில் உங்கள் விளம்பரங்களைப் பிரசுரிக்க...

### கட்டணவிபரம்

| | கறுப்பு வெள்ளை | வர்ணம் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.10,000/- | ரூ.20,000/- |
| அரைப்பக்கம் | ரூ.6,000/- | ரூ.12,000/- |
| காற்ப்பக்கம் | ரூ.3,500/- | ரூ.8,000/- |
| வரி விளம்பரம் | இலவசம் | இலவசம் |

தமிழர் பொருண்மியம்,
கிறீன் மீடியா ஹவுஸ்,
68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

வாட்ஸ் அப் இலக்கம் +94 777 920 384

# வணிகத்தைப் புரிந்துகொள்வது

வணிகமயமாக்கல் என்பது மொத்த மற்றும் சில்லறை விற்பனைக்கு கிடைக்கும் பொருட்கள் அல்லது சேவைகளின் விளம்பரம் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகும். இதில் சந்தைப்படுத்தல் உத்திகள், காட்சி வடிவமைப்பு, போட்டி விலை நிர்ணயம் மற்றும் தள்ளுபடிகள் ஆகியவை அடங்கும்.

பிராண்ட் அதிர்வுகளை உருவாக்கவும், வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்தவும், விற்பனையை அதிகரிக்கவும் விரும்பும் வணிக உரிமையாளர்களுக்கு வணிகமயமாக்கல் அவசியம்.

விற்பனையில் அளவுகளைக் குறிப்பிடுதல், பொருட்களுக்கான அளவுகளை அமைத்தல், காட்சி வடிவமைப்புகளை உருவாக்குதல், சந்தைப்படுத்தல் உத்திகளை உருவாக்குதல் மற்றும் தள்ளுபடிகள் மற்றும் கூப்பன்களைக் கண்டறிதல் ஆகியவை அடங்கும். ஒரு பரந்த பொருளில், வர்த்தகம் என்பது சில்லறை விற்பனை மற்றும் இறுதி நுகர்வோரை அடைகிறது.

வணிகச் சுழற்சிகள் கலாச்சாரங்கள் மற்றும் பருவங்களுக்கு குறிப்பிட்டவை. இந்த சுழற்சிகள் பள்ளி அட்டவணையைச் சுற்றி வரலாம் மற்றும் பிராந்திய மற்றும் பருவகால விடுமுறைகள் மற்றும் வானிலை நிலைமைகளை இணைக்கலாம்.

சில்லறை விற்பனையின் பல்வேறு அம்சங்களைப் பொறுத்தமட்டில் வணிகமயமாக்கல் என்பது வெவ்வேறு விஷயங்களைக் குறிக்கும். எடுத்துக்காட்டாக, சந்தைப்படுத்துதலில், வணிகமயமாக்கல் என்பது ஒரு தயாரிப்பு, படம் அல்லது பிராண்டைப் பயன்படுத்தி மற்றொரு தயாரிப்பு, படம் அல்லது பிராண்டை விற்கும்.

அனைத்து சில்லறை விற்பனையாளர்களும் அவர்கள் விற்கும் பொருட்களின் தயாரிப்பாளர்கள் அல்ல. அனைத்து விற்பனைகளின் மொத்த மதிப்பை அளவிடுவது நிறுவனத்தின் செயல்திறனைப் பற்றிய நுண்ணறிவை வழங்குகிறது. நுகர்வோர் முதல் நுகர்வோர் சந்தையில் இது மிகவும் உண்மையாகும், அங்கு சில்லறை விற்பனையாளர் மூன்றாம் தரப்பு வாங்குபவர்களையும் விற்பவர்களையும் உண்மையில் யாரும் பங்கேற்காமல் இணைக்கிறது.

சரக்குத் துறையில் உள்ள சில்லறை விற்பனையாளர்களுக்கு வர்த்தகம் மதிப்பை வழங்குகிறது; இந்தத் துறையில், சில்லறை விற்பனையாளர்கள் தங்கள் சரக்குகளை அதிகாரப்பூர்வமாக வாங்குவதில்லை. நிறுவனங்கள் பெரும்பாலும் வணிகத்தின் சில்லறை இடத்தில் சரக்குகளை சேமித்து வைக்கின்றன, சில சமயங்களில் மற்றொரு நபரின் அல்லது நிறுவனத்தின் பொருட்கள் அல்லது சொத்தின் கட்டணத்திற்காக. பொதுவாக, அவர்கள் ஒருபோதும் பொருளின் உண்மையான உரிமையாளராக இருப்பதில்லை, ஏனெனில் சரக்குகளில் பொருளை வைத்த நபர் அல்லது நிறுவனம் அவர்கள் தேர்வுசெய்தால் உருப்படியைத் திரும்பப் பெற்று உரிமை கோரலாம்.



மொத்த விற்பனை மதிப்பு என்பது வாடிக்கையாளருக்கு வாடிக்கையாளருக்கு இடையேயான பரிமாற்ற தளத்தின் மூலம் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் விற்கப்படும் பொருட்களின் மொத்த மதிப்பாகும். இது உங்கள் வணிகத்தின் வெற்றியை அளவிடுவது.

சமீபகாலமாக, வர்த்தகம் மேலும் மேலும் முன்னேறி வருகிறது. வர்த்தகத்தின் பாத்திரங்கள் ஒரு பரிணாமத்திற்கு உட்பட்டுள்ளன. முதன்மை வணிகர்கள், முன்பு முக்கியமாக தயாரிப்புகளின் தேர்வு மற்றும் விளக்கக்காட்சியில் அக்கறை கொண்டிருந்தனர், இப்போது பரந்த பொறுப்புடைமை மற்றும் வாடிக்கையாளர் அனுபவத்தில் அதிக கை வைத்துள்ளனர், அத்துடன் காட்சி மற்றும் சந்தைப்படுத்தல் வடிவமைப்பு தொடர்பான வடிவமைப்பு மற்றும் திறமையின் வளர்ச்சியையும் பெற்றுள்ளனர்.

### வணிக நிறுவனம் VS சேவை நிறுவனம்

பெயர் குறிப்பிடுவது போல, ஒரு வணிக நிறுவனம் நுகர்வோருக்கு உறுதியான பொருட்களை விற்கிறது. இந்த வணிகங்கள், உழைப்பு, பொருட்கள் மற்றும் நுகர்வோருக்கு பொருட்களை விற்பதில் உள்ள அனைத்தும் உட்பட செலவினங்களைச் சந்திக்கின்றன.

சேவை நிறுவனங்கள் பணம் சம்பாதிப்பதற்காகவோ அல்லது லாபம் ஈட்டுவதற்காகவோ உறுதியான பொருட்களை விற்பதில்லை. புதுமைகளை மதிக்கும் அல்லது அவர்களின் சேவைகள் தேவைப்படும் வாடிக்கையாளர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் அவர்கள் சேவைகளை வழங்குகிறார்கள். வழங்கும் நிறுவனங்கள் ஆலோசனைகள், ஸ்பா நிறுவனங்கள், நிதி திட்டமிடுபவர்கள், காப்பீடு வழங்குநர்கள் மற்றும் ஹோவீ நிறுவனங்கள் என எதுவாகவும் இருக்கலாம்.

### வணிக உத்திகள்

வாங்குபவர்களை கொள்முதலுக்கு ஈர்ப்பதற்காக வணிகர்கள் பல்வேறு உத்திகளைப் பயன்படுத்துகின்றனர். சாளரம் மற்றும் அங்காடி காட்சிகள், தயாரிப்புகளின் மூலோபாயக் குழுக்கள், தெளிவான அடையாளங்களுடன் கூடிய நன்கு இருப்பு வைக்கப்பட்ட அலமாரிகள், சில விளம்பர தயாரிப்புகள், மாதிரிகள் மற்றும் பிற இலவசங்களை முன்னிலைப்படுத்துதல், கடையில் உள்ள ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பிற அங்காடி விளம்பரங்கள் ஆகியவை



இதில் அடங்கும்.

தொழில்முறைக்குஒத்ததாகஇருப்பதால் தூய்மை மற்றும் நேர்த்தியும் மிகவும் அவசியம். ஆன்லைன் ஷாப்பிங் செய்பவர்களைக் கவரும் வகையில் ஆன்லைன் ஸ்டோர்களும் விற்பனை உத்திகளைப் பயன்படுத்தலாம்.

### விற்பனையின் நன்மைகள்

விற்பனை மற்றும் வாடிக்கையாளர் தக்கவைப்பை நேரடியாகப் பாதிக்கும் என்பதால், சில்லறை விற்பனையாளருக்கு வர்த்தகம் மிகவும் முக்கியமானது. ஒரு கடையில் உடல் இருப்பு மற்றும்/அல்லது ஆன்லைன் இருப்பு இருந்தாலும், அது தன்னையும் அதன் தயாரிப்புகளையும் எவ்வாறு முன்வைக்கிறது என்பது முக்கியமானது. ஒரு கடையில், தூய்மை, அமைப்பு, அணுகல் எளிமை மற்றும் தள்ளுபடிகள் மற்றும் சலுகைகளின் மூலோபாய பயன்பாடு ஆகியவை சாதாரணமாக ஒரு முறை உலாவவும், மீண்டும் வாங்குபவராகவும் மாறும் வாடிக்கையாளருக்கு இடையேயான வித்தியாசமாக இருக்கலாம்.

ஒரு சில்லறை விற்பனையாளர் தனது பிராண்டை வளர்க்கவும், அதே பிரிவில் உள்ள மற்றவர்களுடன் போட்டியிடவும், பொருளாதாரம் சிரமப்படும்போதும் தொடர்புடையதாக இருக்கவும் பயனுள்ள வணிகமயமாக்கல் உதவும்.

வணிகம் என்பது ஒரு பொருளை விற்பனை செய்வதில் பங்கேற்கும் எந்தவொரு நிறுவனத்தையும் குறிக்கிறது. வர்த்தகத்தில் இரண்டு வகைகள் உள்ளன: சில்லறை மற்றும் மொத்த விற்பனை. சில்லறை விற்பனையானது அதன் தயாரிப்புகளை நேரடியாக நுகர்வோருக்கு விற்கிறது, மொத்த விற்பனையாளர்கள் உற்பத்தியாளர்களிடமிருந்துவாங்கிசில்லறை விற்பனையாளர்களுக்கு விற்கிறார்கள்.

### வர்த்தகம் எதைக் குறிக்கிறது?

பரந்த வர்த்தகம் என்பது பொருட்களின் விளம்பரம் மற்றும் விற்பனை ஆகும். இது பெரும்பாலும் சில்லறை விற்பனையைக் குறிக்கிறது, அதன் குறிக்கோள் நுகர்வோரின் வாங்குதல் முடிவுகளை பாதிக்கிறது. இருப்பினும், இது விற்பனையிலிருந்து வேறுபட்டதாக இருக்க வேண்டும். இது விற்பனைக்கு வழிவகுக்கும் செயல்முறையாகும். இது அளவுகளை நிர்ணயித்தல், பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான விலைகளை நிர்ணயித்தல், காட்சி வடிவமைப்புகளை உருவாக்குதல், சந்தைப்படுத்தல் உத்திகளை உருவாக்குதல் மற்றும் தள்ளுபடிகள் அல்லது கூப்பன்களை நிறுவுதல் ஆகியவை அடங்கும்.

### வணிகத்திற்கும் சேவை நிறுவனத்திற்கும் என்ன வித்தியாசம்?

மொத்த மற்றும் சில்லறை விற்பனை நிறுவனம் நுகர்வோருக்கு உறுதியான பொருட்களை விற்கிறது. இந்த நிறுவனங்கள் தயாரிப்புகளை வழங்குவதற்கும் விற்பனை செய்வதற்கும் உழைப்பு மற்றும் பொருட்கள் போன்ற செலவுகளைச் செய்கின்றன. சேவை நிறுவனங்கள் வருமானம் ஈட்ட உறுதியான பொருட்களை விற்பதில்லை. சேவை நிறுவனங்களின் எடுத்துக்காட்டுகள் ஆலோசகர்கள், கணக்காளர்கள் மற்றும் நிதி திட்டமிடுபவர்கள்.

### சில்லறை விற்பனைப் பொருட்களின் முக்கிய வகைகள் யாவை?

சில்லறை விற்பனையானது நுகர்வோர் விரும்பும் தயாரிப்புகளை உள்ளடக்கியது, ஆராய்ச்சி மற்றும் ஒப்பீடு கடைக்கு தயாராக உள்ளது, மேலும் பொதுவாக ஒரு தனிநபர் அல்லது வணிக பார்வையாளர்களுக்கு தேவை உள்ளது. பல வகையான சில்லறை விற்பனைப் பொருட்கள் உள்ளன, மேலும் முதல் ஐந்து வகைகள் தயாரிப்பு, சில்லறை விற்பனை, காட்சி, டிஜிட்டல் மற்றும் ஓம்னிசேனல் ஆகும். பெரும்பாலான சில்லறை விற்பனையாளர்கள் ஐந்தில் ஒன்றில் நிபுணத்துவம் பெற்றவர்கள். இருப்பினும், நம்பமுடியாத ஆர்வமுள்ள சில்லறை விற்பனையாளர்கள் தங்கள் கடைகளைபலவகைகளின்தயாரிப்புகளுடன் விற்பனை செய்கின்றனர்.

### இறுதி எண்ணங்கள்

பார்வையாளர்களின் மனதில் அதிர்வுகளைஉருவாக்கஅனைத்துபிராண்ட் உரிமையாளர்களுக்கும்வணிகமயமாக்கல் முக்கியமானது. வணிக உரிமையாளர்கள் தங்கள் தயாரிப்புகளுக்கு பிராண்ட் ரீகால் ஒன்றை உருவாக்க வேண்டும், அதை வணிகமயமாக்கல் மூலம் செய்யலாம். இது வணிகங்களுக்கு வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்தவும், இறுதியில் பிராண்ட் உரிமையாளர்கள் விற்பனையை அதிகரிக்கவும் உதவுகிறது.

# எங்கட வாழ்வியல்

## பார்வை



தமிழ்க்கவி

கடுமையான மழையும் காற்றும் எனது வளவை உருமாற்றி விட்டிருக்கின்றன. இன்னும் பலருடைய காணிகளின் தோற்றம் மாறியிருக்கலாம். எனது வளவில் சில வாழைகளும் இரண்டு பலாமரமும், பெரிதான வேப்பமரம் ஒன்றும் வேருடன் சாய்ந்து விட்டன.

அதற்காக கவலைப்படாமல் அவற்றை இரண்டுகூலியாட்களைவைத்துதுண்டுகளாக்கி போட்டிருக்கிறேன். அந்த வெற்றிடங்களில் மீண்டும் மரம் நடுவேன். இப்படியாக வருடாவருடம் தாமாக விழுவதும் பெரிய பழ மரங்களிலிருந்துஎன்னால்கழிக்கப்படுவதுமான கிளைகள் எனக்கு எரிபொருளாக மாற்றப்படும். எப்படித்தான் நவீன வசதிகளை நான் வைத்திருந்தாலும் விறகடுப்புச் சமையல் தனி சுவைதான்.

என்ன பானைசட்டி விளக்குவதற்கு ஒரு நேரம் ஒதுக்கியாக வேண்டும். பானை சட்டி விளக்குவதற்கும் எனது வளவில் விழும் தேங்காய்களில் உரிக்கப்படும் தும்பும், வைக்கோலும், இந்த அடுப்பின் சாம்பலும், சிறு துண்டு சோப்பும் போதுமானதாகும். ஒரு குந்து பலகையை போட்டுக்கொண்டு, தண்ணீர் சட்டியை பக்கத்தில் வைத்துக் கொண்டு அவற்றை தொட்டு தேய்க்கும் பொது ஒரு மகிழ்ச்சி எனக்குள் இளையோடும் எனது சின்ன வயது ஞாபகங்கள் துளிர்விடும்.

எங்கள் வீடு கூட்டுக்குடும்பம்தான். என் அத்தைதான் அநேகமாக சட்டிபானை கழுவுவாள். புஜுத்திரங்களை வாழையடியில் போட்டு,அதில்ஒருநித்தியகல்யாணியும்உண்டு. கழுவுகிற நீரில் இரண்டும் செழிக்கும்.அவள் வளையல்கள் குலுங்க பாத்திரங்களை சுழட்டிச்சுழட்டி தேய்ப்பாள். பின் மெலிதாக நீர் தெளித்து அவற்றை காயவிடாமல் பார்த்து கொஞ்சமாக ஒரு சிறு சட்டியில் நீர்வார்த்து எல்லாவற்றையும் கழுவிக்கழுவி பெரிய பாத்திரத்தில் உள்ள நீரில் போடுவாள் அது இரண்டாவது அலசல். பெரும்பாலும் வெண்கல லோட்டா, குவளை, கும்பாக்கள். தகதகவென்று மின்னும் சட்டிபானை கழுவுகிற இடத்திலேயே இரண்டு தட்டுகள் கொண்ட பரண் அமைத்திருப்போம். கீழ்த்தட்டில் தீய பாத்திரங்கள்.மேல்தட்டில்அன்றாடம்பாவிக்கும் மச்சச் சட்டிபானை எல்லாம் கழுவியபின் வெய்யிலில் உலர விடுவோம். அதற்குத்தான் இந்த முற்றத்து ‘சட்டிபானைச்சிறாம்பி;’

எல்லாம் காய்ந்தபின் சமையலுக்குத் தேவையானபாத்திரங்கள்மட்டும்உள்ளேவரும் ஏனையவை பத்திரமாக அந்தப்பரணிலேயே இருக்கும்.பெரும்பாலும்சமையல்பாத்திரங்கள் மண்ணில்செய்தவைகளே.எமதுபாவனைக்குத் தேவையான பானைகள் சட்டி குண்டான், அரிக்கன்சட்டி, உலைமூடி, ரொட்டித்தட்டு மா வறுக்கும் சட்டி மா குழைக்கும் சட்டி எல்லாமே மட்பாண்டங்கள்தான்ஏனையவைவெண்கலம். புஶ்ரீத்தளை பாத்திரங்களின் உள்ளே ஈயம் பூயிருக்கும். செப்புப்பாத்திரத்தல் குடிநீரை வைத்திருப்பது எவ்வளவு சிறப்பானது என்பதை இப்போது சொல்லித் தருகிறார்கள். நாங்கள் சருவக்குடத்தில்தண்ணீர்அள்ளிவைத்திருந்து பித்தளைச்செம்பில் வார்த்துக் குடிப்போம்.

மேற்குறித்த சமையல் வேலையில் சட்டிபானைக்கு பாத்திரங்களுக்கு கொடுத்த காசை விட வேறு செலவு இல்லை. இன்று இதே வேலைக்கு நாம் செலவிடும் பணம் எவ்வளவு என்றால் நாம் மலசலங்கழிப்பதே வீட்டுக்குள்தானே. சுட்டிபானை கழுவமட்டும் வெளியே போவோமா?, அதற்கான பாத்திரமும் வேண்டாம் குழாயைத்திருகினால் தண்ணீர் கொட்டும். அதில் எவர்சில்வர் பாத்திரங்களைபோட்டு, ஓடுகிறகிறதண்ணியில உரைச்சுவிட்டேன் சந்தனத்தை’என்று பாடிக்கொண்டே விலைக்கு வாங்கிய அலுமினியத் தும்பால் விம் சோப் போட்டு விளக்கி அதிலிருந்து கிருமிகளை வெளியேற்ற அதற்கான சாம்பூக் கரைசலில் அலம்பி எடுத்து அழகிய தட்டுகள் பொருத்திய அடுக்குத்தட்டில் நீர் வடியுமாறு கொழுவி விட்டால் அதிலிருந்து வடிகிற நீரை பின்னர் தனியாக சுத்தம் செய்ய வேண்டும். கைகளையும் கழுவிய இடத்தையும் சாம்பூ பொட்டு அலம்பி நீரை ஊற்றி கழுவிவிட்டால் முடிகிறது. மாதாந்தம் விம்சோப் சாம்பூ தும்பு எல்லாமே சீனாவிலோ யப்பானிலோ ஒரு கம்பனி உற்பத்தி செய்து கப்பலில்ஏற்றிஅனுப்புகிறது. இதில்எந்தஒன்று குறைந்தாலும், எங்கள் வீட்டு வேலைக்காரிகூட சட்டிபானை கழுவ மாட்டாள்.

இந்த சாம்பல் எங்களது வீட்டுத் தோட்டத்துக்குபசளையாகிறது.கரிபல்விளக்கும் பொருளாகும். கரியில் பல்விளக்கியது கேவலம். சுகாதாரக்கேடு, என்றவர்களுக்கு இப்போது பல் துலக்கும் பற்பசையில் உப்பு கரியெல்லாம் கலந்து வருகிறது. கூடாதா? என்மாமன் பல்லே விளக்க மாட்டார். யாராவது கண்டால்தான் கரியை சும்மா போட்டு இழுத்துவிட்டு விளக்கிவிட்டேன் என்று கூறிவிட்டுப் போய்விடுவார். அவர் இறக்கும்போது எழுபது வயது. அவருடைய

இப்போது எனக்கொரு கதை நினைவுக்கு வருகிறது.

ஒருவர் நூற்றிபத்தாவது வயதில் இருந்தார்;. இதைக்கேள்விப்பட்டு ஒரு பத்திரிகை நிறுவனம் அவரைப் பேட்டி எடுக்க வந்தது.

‘உங்கள் ஆயுளின் ரகசியம் என்ன?’என்று கேட்டார்கள். அவர் சொன்னார் ‘நான் குடிப்பதில்லை பெண்களுடன் தொடர்பு கிடையாது தினமும் குளித்து சத்தான உணவுகளை உண்டு .’என இவர் பேசிக் கொண்டிருக்கும் போது வீட்டுக்குள்ளேயிருந்து பெரிய ரகளைச்சத்தம் கேட்டது. இவர்கள் தமது ஒளிப்பதிவை நிறுத்திவிட்டு ‘ அங்கே என்ன சத்தம் ? என்று கேட்டார்கள். அவர் சிரித்துவிட்டு சொன்னார்,

‘அதுவாஅதுஎன்அண்ணன்தான்.தினமும் குடித்து விட்டு நாளாந்தம் ஒரு பொண்ணுடன் சல்லாபிப்பாஜு.; அவர்களுக்குள் ஏதோ தகராறுபோல அதுதான் சத்தம்’என்று.

நாங்கள் விசயத்துக்கு வருவோம்.

எமது கைகளில் பணம் இருக்கிறது என்பதால் நாம் எமது சொந்த வளங்களை அழிவில்போட்டுவிட்டுஎல்லாப்பொருட்களையும் காசுக்கு வாங்குகிறோம். சும்மா அல்ல பல்குத்தும் குச்சி காது குடையும் குச்சி கூட விலைக்கு வாங்குகிறோம். இவையெல்லாம் நம் முன்னோர்கள் செய்யாத வேலைகளா? புனங்காணியிலிருந்து விழும் வட்டுகளும் ஓலைகளும் மட்டைகளையும் விற்று வந்த காசில்தான் யாழ்ப்பாண மக்கள் பிள்ளைகளை படிப்பித்தார்கள். இன்றைய அதே பனை வட்டுகள், ஓலைகள், மட்டைகள் என்பவை குப்பைகளாகி அவற்றை தெருவெங்கும் நிரப்பி, தீயிட்டு கொழுத்தவும் வழியின்றி. சமுதாயம் பாழடிக்கப்படுகிறது. பாவனைக்கு உகந்தவைகளை பாவனையில் எடுத்தாலுமே ஏராளமான குப்பைகள் குறைந்துவிடும்.

# ஆழ்ந்த அஞ்சலிகள்!



## பாரதி இராஜநாயகம்
## (முன்னாள் ஆசிரியர்)
## தமிழர் பொருண்மியம்/மாலைக்கதிர்

**தமிழ் ஊடகப்பரப்பின் பெறுமதிமிக்க ஆளுமைக்கு தமிழர் பொருண்மியத்தின் ஆழ்ந்த அஞ்சலிகள்!**

நிர்வாக இயக்குநர், ஆசிரியர், ஊடகர்கள், பணியாளர்கள்
பசுமை ஊடக இல்லம்
Green Media House (pvt) ltd.

# மத்திய வங்கியின் (OPR) ஓரிரவு கொள்கை வீதக் குறைப்பின் வரி கொள்கை தாக்கங்கள்

## Tax Policy Implications of Central Bank's Overnight Policy Rate (OPR) Cut

இலங்கை மத்திய வங்கி ஓரிரவு கொள்கை வீதத்தினை (Overnight Policy Rate - OPR) அறிமுகப்படுத்துவதுடன் அதன் நாணயக் கொள்கை நிலைப்பாட்டினை மேலும் தளர்த்துகின்றன. இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கைச் சபையானது 2024 நவெம்பர் 26ஆம் நாளன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் நாணயக் கொள்கை நிலைப்பாட்டினை மேலும் தளர்த்துவதற்கும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட ஓரிரவுக் கொள்கை வீதத்தினை 8 சதவீதமாக நிர்ணயிப்பதற்கும் தீர்மானித்துள்ளது. இம்மாற்றத்துடன் கொள்கை வட்டி வீதத்தின் வினைத்திறனான குறைப்பானது நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் தொழிற்பாட்டு இலக்காகத் தொடர்ந்து தொழிற்படுகின்ற சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதத்தின் தற்போதைய மட்டத்திலிருந்து ஏறத்தாழ 50 அடிப்படைப் புள்ளிகளாக அமையும்.




இலங்கை மத்திய வங்கியால் (CBSL) சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட ஓரிரவு கொள்கை வீதத்தின் (OPR) நேரடியாக வரி கொள்கைகளை பாதிக்காது. எனினும், அதன் பரந்த பொருளாதார தாக்கங்கள், வரி கொள்கைகளின் பரிணாமத்தில் முக்கிய பங்கு வகிக்கலாம். அதன் தாக்கம் வரி கொள்கைகள், வரியியல்கொள்கைகள், மற்றும்நிதிமேலாண்மை மீது பெரிய மாற்றங்களை ஏற்படுத்தலாம். இதன் விளைவுகள் மற்றும் எதிர்பார்க்கப்படும் மாற்றங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

### 1.வரி கொள்கைகளின் தாக்கம்:

- வருமான வரி: ஓரிரவு கொள்கை வீதத்தினை குறைந்ததால், வங்கிகள் குறைந்த வட்டி வீதத்தில் கடன் வழங்க முடியும், இதனால் வருமானவரிக்கு அடிப்படை தாக்கம் ஏற்படும். இதில், வணிக நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் வட்டி செலவுகளை குறைக்க முடியும், இது அவர்களுடைய வரியலுக்கான செலவுகளை குறைக்கும். குறிப்பாக, வட்டியூட்டல் முறையில் பெரிதும் சார்ந்த கடன் பெற்றவர்களுக்கு இது உதவியாக இருக்கும்.
- பிரச்சார முறைமைகள் மற்றும் தொழிலாளர் வரி: ஓரிரவு கொள்கை வீதம் குறைவாக இருக்கும் போது, ஒப்பந்தங்கள் மற்றும் முதலீடுகள் அதிகரிக்க வாய்ப்பு இருக்கும். இந்த மாற்றம் வரியாளர்களுக்கு புதிய வருவாய் வாய்ப்புகளை உருவாக்கும், ஆனால் அதே சமயம், குறைந்த வட்டியுடன் அதிக கடன் வாக்குறுதிகளால் வரியளவு பெருக்கப்படும்.

### 2. நிதி மேலாண்மை மற்றும் வரி தாக்கம்:

- பொதுவான வணிகங்கள் மற்றும் சிறு மற்றும் நடுத்தர வணிகங்கள் (ளிறீளிசிவி): மிகவும்குறைந்தவட்டிவீதங்கள்ஓரிரவுகொள்கை வீதம் கடன் பெறல் மற்றும் நிதி உற்பத்தி செலவுகளைக் குறைக்க உதவும். இதனால், சிறு மற்றும் நடுத்தர வணிகங்கள் (MSMEs) மற்றும் ஆராய்ச்சியில் உள்ள நிறுவனங்கள் அதிக தொழில்முனைவோரை ஈர்க்க முடியும். இது வருமான வரி பெறுபவர்களுக்கு மேலதிக வருமானத்தை உருவாக்கும் வாய்ப்பாகும்.
- தொழிலாளர் வருமான வரி: குறைந்த வட்டி வீதங்கள் மூலம் வணிக வளர்ச்சி அதிகரிக்கும், அதனால் தொழிலாளர்களுக்கு கூடுதல் வருமானம் உருவாகும். இது, சராசரி வருமானத்தில் மேம்பாடு காண்பிக்கும், அதனால் வரியிடுதல் அதிகரிக்கும்.

### 3. வரி அமைப்பில் எதிர்பார்க்கப் படும் மாற்றங்கள்:

- அதிக பட்சம் உள்ளவர்களுக்கு சலுகைகள்: குறைந்த வட்டி வீதம், மத்திய வங்கியினால் வைப்புகளுக்கும் கடன்களுக்கும் எதிர்பார்க்கப்படும் தாக்கங்களை பிரத்தியேக வரி சலுகைகள் மூலம் அதிகரிக்கலாம். இதன் மூலம், தொழிலாளர்களுக்கும் பெரிய வரி இலவசங்கள் கிடைக்கும்.
- அறிக்கைகள் மற்றும் புதிய நிதி கொள்கைகள்: புதிய ஓரிரவு கொள்கை வீதம் செயல்படுத்தப்பட்ட பிறகு, அறிக்கை மற்றும் தொகுப்புகளை மீட்டெடுக்கும் திட்டங்கள் துவக்கப்படலாம், அதனால் வரி கொள்கைகளில் புதிய மாற்றங்கள் ஏற்படும். இதன் மூலம், வருமான வரி, விலை நிர்ணயம், மற்றும் சேவை வரி போன்ற கொள்கைகள் புதுப்பிக்கப்படலாம்.



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

- பொருளாதார வளர்ச்சிக்கு வரி நுட்ப உதவிகள்
  - புதிய தொழில்முனைவோர்களுக்கு துணை: ஓரிரவு கொள்கை வீதம் குறைவதனால் தொழில் தொடங்குவதற்கு வசதியாக இருக்கும்; இதற்கேற்ப 'ஸ்டார்ட்அப் நிறுவனங்களுக்கு' வரி சலுகைகள் வழங்கப்படும்.
  - வரி சலுகை திட்டங்கள்: புதிய ஓரிரவு கொள்கை வீதத்தின் அடிப்படையில் சிறு மற்றும் நடுத்தர வணிகங்களுக்கு சலுகைமிக்க வரி திட்டங்களை அரசு அறிவிக்க வேண்டும்.

### 4. தனியார் நிறுவனங்கள் மற்றும் அரசாங்க நிலைத்தன்மை:

- சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களின் மீது தாக்கம்: குறைந்த வட்டி வீதம், நிறுவனங்களுக்கு கடன் பெறுவதை எளிதாக்கும்.
- நுகர்வு மற்றும் சிறு மற்றும் நடுத்தர வணிகங்கள் மீதான வட்டி வீதத்தின் தாக்கம்
- நுகர்வோர்கடன்கள்: வீட்டுகடன், வாகன கடன், கல்விக்கடன் போன்றன குறைவான வட்டி செலவினால் குடும்பங்களுக்கு நிதி நெருக்கடிகளை சீராக்கும்.
- சிறு மற்றும் நடுத்தர வணிகங்கள்

/ னிறீனிசிவி: வணிகர்கள் ஓரிரவு கொள்கை வீதத்தின் சலுகைகளை விரைந்து பயன்படுத்தி, வணிக நடவடிக்கைகளுக்கான கடன் தாராளமாக எடுக்க முடியும்.

## 5. வரி கொள்கைகளின் எதிர்காலத் திட்டங்கள்:

மத்திய வங்கியின் எதிர்கால கொள்கைகள்: மத்திய வங்கியின் OPR கொள்கைகள், சராசரி வருமானத் திட்டங்களில் விருத்தியை ஏற்படுத்தும்.

## 6. வணிக பொருளாதாரம் மற்றும் நிதி திட்டங்கள்:

பொது கடன் மற்றும் முதலீட்டாளர்கள்: குறைந்த ஓரிரவு கொள்கை வீதம், வணிகங்களில் கடன்பெறுவோருக்கான செலவுகளை குறைக்கும். இதுவணிகவரிஅடிப்படையில்சிலமாற்றங்களை உருவாக்கும். பின்வரும் தாக்கங்கள்:

1. நிறுவன வரி: குறைந்த வட்டி வீதம், அதிக கடன் எடுக்கும் நோக்கத்துடன் வரி செலுத்தும் நிறுவனங்களுக்கு மேலதிக சலுகைகளை அளிக்கும்.

2. முதலீட்டாளர்களுக்கான வரிகள்: முதலீட்டாளர்கள், குறைந்த வட்டி வீதம் காரணமாக, ஆறுதல் அனுபவிக்கும் மற்றும் அதை பொருளாதார வளர்ச்சிக்கு பயன்படுத்தி, வரி தீர்வுகளை நீடிக்கும்.

தொழில்முனைவோர்களுக்கு திறந்த வாய்ப்புகள்:

வட்டி வீதம் குறைவதால் தொழில்முனைவோர்கள் எளிதாக கடன் பெற முடியும். இது புதிய தொழில்முனைவோர்களுக்கான வரிவிதிப்பு வாய்ப்புகளை உருவாக்கும். அவற்றில் கடன், வரி கொள்கைகள், முதலீடுகள் என மாறும் காட்சிகள் பரிசீலிக்கப்பட்டு, நிறுவனம் வளர்க்கும் அணுகுமுறைகளை மாற்றும்.

## 7. வருமான வரி மற்றும் செலவீனங்கள்:

வரி மதிப்பீடு:

குறைந்த வட்டி வீதம், பொதுவாக அதிக வருமானம்தரும்வாய்ப்புகளுடன்வணிகநிறுவனம் மற்றும் தனியார் உற்பத்தி நிறுவனங்களுக்கான வருமானத்தை மேலாண்மையில் இடைமுகமாக கடந்து அனைத்து வகை வரிகளையும் பொருத்தவரை வேறுபடும். இது, வரியிலிருந்து மேம்பாடு ஏற்படும்.

செலவுகள் மற்றும் வணிக இலாபம்:

வட்டி வீதம் குறையும்போது, சிறு நிறுவனங்களின் செலவுகள் குறையும், இதனால் புதிய வருமானத்தை உருவாக்குகின்றன.

## 8. பணவீக்கம் மற்றும் நிதி அமைப்பு:

பணவீக்கம் கட்டுப்பாடு:

குறைந்த ஓரிரவு கொள்கை வீதம், பணவீக்கம் அதிகரிக்கக்கூடும். இதன் விளைவாக, பொருளாதார விகிதங்கள் மூலம் வரி கட்டுப்பாட்டுக்கு மிகுந்த தாக்கங்கள் ஏற்படும்.

பங்கு சந்தைகளும், கிராமப்புற வளர்ச்சியும் மீண்டும் வட்டியூட்டல் கொள்கையில் கண்டு கொள்ளும்.

பணவீக்கம் மற்றும் அதன் வரி விளைவுகள்

நுகர்வு அதிகரிப்பு: குறைந்த ஓரிரவு கொள்கை வீதம் நுகர்வு அளவை உயர்த்தும்; அதனால், ஹுறீவீ (பொருட்கள் மற்றும் சேவை வரி) வருவாய் கூடும்.

பணவீக்கம் மேலாண்மை: மத்திய வங்கி பணவீக்கம் கட்டுப்படுத்த நுட்பமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், இல்லையெனில் வரி செலுத்துநர்களின் அத்தியாயங்கள் பாதிக்கப்படலாம்.

வரி கொள்கைகள் மற்றும்

## 9. வரியியல் மற்றும் வணிக ஒத்திகைகள்:

சொத்துக்களின் நிலைத்தன்மை:

குறைந்த வட்டி வீதம், சொத்துக்கள் மற்றும் பணப் பரிவர்த்தனைகளில் சீரான நிலைப்பாடுகளை உருவாக்கும். இது, பருவ நேரத்தில், நிறுவனங்களை அதிகமான வரி கொள்கைகளை உருவாக்கும்.

## 10.சர்வதேச மூலதனம் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள்:

உள்ளூர் முதலீட்டாளர்கள்:

குறைந்த வட்டி வீதம் உள்ளூர் முதலீட்டாளர்களின் வளர்ச்சிக்கான வாய்ப்புகளை உருவாக்கும். வெளிநாட்டில் இருந்து வருவாய் வரும் புதிய முதலீட்டாளர்கள் அதிகரிக்கலாம், இது சர்வதேச வரி கொள்கைகளை தீர்க்கும்.

சர்வதேச வரி அமைப்பு:

சர்வதேசதளத்தில், சர்வதேசவரிகொள்கைகள் மாற்றங்களைஏற்படுத்தி, புதியவரியைபின்பற்றும் விதிகளை உருவாக்க முடியும்.

வட்டியைக் குறைப்பதன் மூலம் வெளிநாட்டு நேரடி முதலீடு (FDI) மீதான தாக்கம்

வெளிநாட்டு முதலீட்டாளர்கள்: குறைந்த வட்டி வீதம் உள்ளூர் முதலீடுகளை ஊக்குவிப்பதோடு, வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு இலங்கை ஒரு ஈர்க்கும் இடமாக மாறும்.

நாணய மாற்றம்: ஓரிரவு கொள்கை வீதம் குறைவதால், இலங்கை ரூபாயின் மதிப்பு மீதான தாக்கம் வெளிநாட்டு முதலீடுகளின் ஆதரவை குறைக்காமல் இருக்கும்.

வெளிநாட்டு நேரடி முதலீடு (FDI) வரி சலுகைகள்: வெளிநாட்டு நேரடி முதலீட்டை அதிகரிக்க அரசாங்கம் தரும் வரி சலுகைகளும், ஓரிரவு கொள்கை வீதத்தின் முக்கிய பங்கை விளக்கலாம்.

## 11. நேரடி வரி, வரி பயனாளர்கள் மற்றும் வரி திரட்டல்கள்:

பொருளாதார நிதி நிலைத்தன்மை:

ஓரிரவு கொள்கை வீதம் குறைவதால் அனைத்து வரி பயனாளர்களுக்கு நேரடி தாக்கம் ஏற்படும். இது புதிய வரிவிதிப்பு, வரி திரட்டல் மற்றும் பொருளாதார நிலையை மாற்றுவதற்கான ஒரு நேரடி நடவடிக்கையாக அமையும்.

## 12. ஓரிரவு கொள்கை வீதம் குறைவால் மொத்த பொருளாதாரத்துக்கான புதிய முன்மொழிவுகள்

நிதி துறையில் சீர்திருத்தம்: வரி நுட்ப அமைப்பை மத்திய வங்கி ஓரிரவு கொள்கை வீத நிலைக்கு ஏற்ப புதுப்பிக்க பரிந்துரை செய்யலாம்.

அரச நிதி கணக்கிடல்: ஓரிரவு கொள்கை வீதம் நுணுக்க காரணமாக மாற்றம் அடையும் பொருளாதார நிலையை கணக்கிட்டு அரச செலவீனங்களின் ஒழுங்குமுறை தேவையாகின்றது.

## 13. இலங்கையின் கடன் சுமை மற்றும் அரச நிதி மேலாண்மை

அரசவட்டிசெலவுகள்: ஓரிரவுகொள்கை வீதம் நுணுக்கு குறைவதால் அரசாங்க கடனுக்கு செலுத்தும் வட்டி குறையும், இது நாடளாவிய நிதி நிலைத்தன்மையை மேம்படுத்தும்.

அரச உள்கட்டமைப்பு திட்டங்கள்: குறைந்த ஓரிரவு கொள்கை வீத வாய்ப்பை பயன்படுத்தி, நீண்ட கால உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு கடன் இடுப்பு விரைவாக ஏற்படுத்தலாம்.

இலங்கை மத்திய வங்கியின் ஓரிரவு கொள்கை வீதம் 8.00% ஆக குறைக்கப்பட்டதன் மூலம், அது பொருளாதார மற்றும் வரி கொள்கைகளில் பல தாக்கங்களை ஏற்படுத்தும். குறைந்த வட்டி வீதம், வணிகங்கள் மற்றும் தனிநபர்களுக்குகடன்பெறுதல்எளிதாக்குவதோடு, வரி செலுத்தும் திறனை மேம்படுத்தும் வாய்ப்புகளை உருவாக்குகின்றது. இதன் மூலம், சிறு மற்றும் நடுத்தர வணிகங்கள் (MSMEs), பொதுமக்கள் மற்றும் முதலீட்டாளர்களுக்கு புதிய வாய்ப்புகள் அதிகரிக்கும்.

ஆனால், இந்த கொள்கையில் ஏற்படும் பணவீக்கம் மற்றும் நிதி நிலைத்தன்மை குறைவதற்கான சவால்களும் உள்ளன. வரி கொள்கைகள், வருமான வரி மற்றும் சிறு வணிகங்களுக்கு ஏற்படும் மாற்றங்களை அதிகரிக்கும் போது, புதிய சர்வதேச முதலீடுகள் மற்றும் உள்ளூர் முதலீடுகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

நேரடி தாக்கங்கள், வரி கொள்கைகள் மற்றும் நிதி நிலைத்தன்மையை மாற்றும் பல நிலைகளில், ஓரிரவு கொள்கை வீதம் என்பது இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கும், வரி நிர்வாகத்திற்கும் புதிய பாதையை வகுக்கின்றது. எனவே, வரி, நிதி மற்றும் வணிக திட்டங்கள், கொள்கைகள் மற்றும் பொது நிலைப்பாடுகளுக்கு துல்லியமான மதிப்பீடுகள், மாற்றங்கள் மற்றும் தீர்வுகள் உருவாக்கப்பட வேண்டும்.

**எமது நாட்டை எடுத்துக் கொண்டால் பல்வேறு வகையான ஈரநிலங்களைக் காணலாம். 41வகையான ஈரநிலங்கள் இலங்கையில் காணப்படுவதாக பட்டியற்படுத்தப்பட்டுள்ளது. கடற்கரையை அண்டிய சதுப்பு நிலங்கள், ஆற்று முகங்கள், கழிமுகங்கள், கடனிரேரிகள், உள்நாட்டு நீர் நிலைகள் என்பன அவற்றில் சிலவாகும். ஈரநிலங்களானது மனிதனது செயற்பாடுகள் காரணமாக இன்று அருகிச் செல்கின்றன**

# இலங்கையின் ஈரநிலங்கள்

மதுமிதா

இயற்கைச் சூழலின் பெரும் பகுதி நீரில் அமிழ்ந்த நிலையில் காணப்படுகின்றது. நிலையா கவோ அவ்வப்போதோ நீருனுள் அமிழ்ந்த நிலையில் காணப்படும், இவ்வாறான நிலப்பரப்புகள் 'ஈர நிலங்கள்' எனப்படும். புவியின் மொத்த நிலப்பரப்பில் ஏறத்தாழ ஆறு சதவீதமான பகுதி ஈர நிலமாகக் காணப்படுகின்றது. உலகின் எல்லா நாடுகளிலும ஈர நிலங்கள் குறிப்பிட்ட வீதத்தில் காணப்படுகின்றன.

எமது நாட்டை எடுத்துக் கொண்டால் பல்வேறு வகையான ஈரநிலங்களைக் காணலாம். 41வகையான ஈரநிலங்கள் இலங்கையில் காணப்படுவதாக பட்டியற்படுத்தப்பட்டுள்ளது. கடற்கரையை அண்டிய சதுப்பு நிலங்கள், ஆற்று முகங்கள், கழிமுகங்கள், கடனிரேரிகள், உள்நாட்டுநீர் நிலைகள் என்பன அவற்றில் சிலவாகும். ஈரநிலங்களானது மனிதனது செயற்பாடுகள் காரணமாக இன்று அருகிச் செல்கின்றன. மனிதன் தனது தேவைகளுக்காக மாத்திரமன்றி வியாபார நோக்கங்களுக்காகவும் இன்று ஈர நிலங்களை இரக்கமின்றி கூறு போடுகின்றான்.


இதனைத் தொடர்ந்து ஈரநிலங்களை விவேகத்துடன் கையாள்வதற்கும் எதிர்கால சந்ததியினரையும் கருத்தில் கொண்டு பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டாலும் இன்றுவரை பேசக்கூடிய பிரகடனமாக 'ரம்சார்' பிரகடனம் காணப்படுகின்றது. ஈரானின் 'ரம்சார்' நகரத்தில் 1971 இல் செய்யப்பட்ட பிரகடனமே ரம்சார் பிரகடனமாகும். 1975 இல் இது நடைமுறைக்கு வந்தது. 'சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்ததும் முக்கியமாக நீர்ப்பறவைகளின் வாழிடமுமான ஈரநிலம் பற்றிய ஒப்பந்தம் என இந்த ஒப்பந்தத்தை அழைப்பர்.

ஈரநிலம் என்பதை ரம்சார் பிரகடனம் வரைவிலக்கணப்படுத்தும் விதம் பின்வருமாறு காணப்படுகின்றது. 'வற்று' மட்டம் தொடக்கம் 6 மீற்றருக்குக் குறைவான கடற் பிரதேசங்கள் உட்பட நிலையாக தேங்கி நிற்கும் அல்லது பாய்ந்து செல்லும் நன்னீரிலோ, சவர் நீரிலோ, உவர் நீரிலோ தற்காலிகமாக அல்லது நிலையாக அமிழ்ந்து காணப்படும் செயற்கையான அல்லது இயற்கையான சதுப்பு நிலங்கள், வில்லு நிலங்கள், நீர்நிலைகள், நீர் வழிகள், முற்றா நிலக்கரி நிலங்கள் சேற்று நிலங்கள் ஆகியன ஈரநிலங்களாகும்.

ஈர நிலங்கள் என்பன கற்காலத்திலும் இக்காலத்திலும் முக்கிய பாத்திரமாக மனித வாழ்வில் காணப்படுகின்றன. மனித குல வரலாற்றை எடுத்துக் கொண்டால் நீருடன் தொடர்புடையதாகவே காணப்படுகிறது. யூப்ரற்றிஸ், தைக்கிரிஸ், நைல், இந்து, ஹெவாங்கோ முதலான நதிகளை அண்டியேமனிதகுலநாகரிகம்தோன்றியது. இதனால்தான் பண்டைய இலங்கையர் சமூகத்தில் குளமும் பயிர் நிலங்களும் முக்கியமானதாகக் காணப்பட்டன. இதனால் தான் பொலன்னறுவை யுகத்தில் எமது






நாடு தானியக் களஞ்சியம் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றது.

இலங்கையின் ஈர நிலங்களை இரண்டாகப் பிரிக்கலாம்.

1)இயற்கையான ஈரநிலங்கள்

2)செயற்கையான ஈரநிலங்கள்

இயற்கையான ஈரநிலங்களாக நன்னீர், உவர் நீர், சவர்நீர் ஈர நிலங்கள் காணப்படுகின்றன. செயற்கையான ஈரநிலங்களாக நிர்மாணிக்கப்பட்ட வாவிகள், குளங்கள், நீருயிர் வளர்ப்புக் குளங்கள், வயல்கள் உப்பளங்கள் போன்றன காணப்படுகின்றன. 1989 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட ஆசிய ஈரநில விபரக்கொத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள முக்கியமான இலங்கையின் 41 ஈரநிலங்கள் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்தவை.

ஈரநிலம் என்பது மனிதனின் இருப்புக்குத் துணைசெய்யக்கூடிய ஒன்றே தவிர அழிவை ஒருக்காலும் ஏற்படுத்தாது. இன்று மனிதன் ஈரநிலங்களை பயனற்ற நிலங்களாக கருதி பாரிய கட்டடங்களையும் தொழிற் சாலைகளையும் அமைத்து வருகின்றான். இவை தடைசெய்யப்பட வேண்டும்.

ஈர நிலங்களில் மிகப்பரந்த உயிர்ப் பல்வகைமை காணப்படுகின்றது. பல அரிய இன மிருகங்களும் தாவரங்களும் பறவைகளும் ஈரநிலங்களில் காணப்படுகின்றன. இன்று இவற்றை மனிதன் வேட்டையாடி இயற்கையின் பொறிமுறைகளை இம்சிக்கின்றான். அண்மையில் நீர் கொழும்பில் பல அரிய இன ஆமைகளைப் பிடித்து அவற்றின் இறைச்சியை வேறாக்கி கூடுதலான விலைக்கு விற்றவர்களை கைது செய்த விடயம் அனைவருக்கும் தெரிந்ததே.

**ஈரநிலங்கள் எதிர்நோக்கும் சவால்கள்**

கண்டல்தாவர அழிப்பு, சூழல் மாசடைதல், சட்டவிரோத காடழிப்பு, விவசாய நிலங்களை குடியிருப்பு நிலங்களாக மாற்றுதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

ஈரநிலங்கள் சில உயிரினங்களின் பிறப்பிடமாகவும் மற்றும் சில உயிரினங்களின் வாழிடமாகவும் அமைந்துள்ளன. ஈரநிலங்களில் இருந்து நாம் பல சேவைகளையும் பாவனைப் பொருட்களையும் பெறுகிறோம். அது மட்டுமன்றி பொழுது போக்கு அம்சமாகவும் மனமகிழ்வூட்டும் இயற்கைச் சூழலாகவும் அமைந்துள்ளது. உல்லாசப்பயணிகளைக் கவரும் இடங்களாக உள்ளன. எமது நாட்டின் இயற்கை அழகிலும் ஈர நிலங்கள் பெரிதும் பங்களிப்புச் செய்கின்றன.

சூழல் நாசகாரிகள் தமது சுகபோகத்திற்காக ஈரநில வளங்களைச் சுரண்டிப் பிழைப்பதன் மூலம் நமது சூழலை அழிக்கின்றனர். பண்டைய காலம் தொட்டு மனிதனுக்கு மட்டுமன்றி, அனைத்து உயிரினங்களுக்கும் பல்வேறு வழிகளில் சேவையாற்றி வந்துள்ள ஈரநிலங்களை எதிர்காலச் சந்ததியினருக்காகப் பேணிக்காக்க வேண்டியது எமது பொறுப்பும் கடமையுமாகும். ஈர நிலங்களில் மேற்கொள்ளப்படும் பல்வேறு வகையான நாசகாரச் செயற்பாடுகளைத் தடுப்பதற்கான வழிவகைகள் உடன் மேற்கொள்ளப்படல் வேண்டும். இச்செயற்பாடுகளின் பெறுபேறு ஈர நிலக் காப்பாக அமைதல் வேண்டும்.




ST Graphic: Nalin Balasuriya Source: Ramsar Information Sheet for Wilpattu

# கோதுமை

கோதுமை உலகில் அதிகமாக பயிரிடப் படும் தானிய வகைகளில் ஒன்றாகும். அரிசி, கோதுமை உட்பட பல உணவுகள் தானிய பயிர்களில் இருந்து பயிரிடப்படுகின்றன.

ஓட்ஸ், சோளம், பார்லி, கம்பு மற்றும் பருப்பு வகைகளும் தானியங்களில் அடங்கும்.

**கோதுமை நன்மைகள்**

கோதுமை பல இனங்கள் ஒன்றாக சேர்த்து ட்ரிட்டிகம் என்று அழைக்கப்படுகின்றன.

ரொட்டி, சப்பாத்தி மற்றும் நான் ரொட்டி, பிஸ்கட், அப்பம், கேக், பீஸ்ஸா, பாஸ்தா போன்ற பல உணவுகளில் கோதுமை ஒரு முக்கிய மூலப்பொருளாக பயன் படுத்தப்படுகிறது.

கோதுமை கிழக்கு எத்தியோப்பியன் ஹைலேண்ட்ஸின் அருகிலுள்ள லெவண்ட் பகுதியை பூர்வீகமாக கொண்ட ஒரு வகை தானியமாகும்.

இது இப்போது உலகளவில் பயிரிடப்படுகிறது. மக்கா சோளம் மற்றும் அரிசிக்கு பிறகு அதிக அளவில் உற்பத்தி செய்யப்படும் மூன்றாவது தானியமாகும்.

கோதுமை உற்பத்தியில் உலக அளவில் சீனா முதலிடத்தில் உள்ளது.

அதற்கு அடுத்த இடத்தில் அமெரிக்கா, இந்தியா மற்றும் ரஷ்ய கூட்டமைப்பு ஆகிய நாடுகள் உள்ளன.

இந்த நான்கு நாடுகளும் சேர்ந்து உலக அளவிலான கோதுமை உறப்பதியில் 50 சதவீதம் பங்கு வகிக்கின்றன.

கஜகஸ்தான் மற்றும் கனடா, ஐந்தாவது மற்றும் ஆறாவது இடத்தில் உள்ளன.

இந்தியாவில் உத்தர பிரதேசம், பஞ்சாப், ஹரியானா, மத்திய பிரதேசம், ராஜஸ்தான், பீகார் மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்களில் கோதுமை அதிக அளவு பயிரிடப் படுகிறது.

**கோதுமை வகைகள் :**

கோதுமையில் அடர்சிவப்பு, சுமாரான சிவப்பு வெள்ளை என நிறங்களைப் பொறுத்து மூன்று வகைகள் உள்ளன.

மேலும் கோதுமையின் தன்மை கொண்டு கடின கோதுமை அல்லது பலவீனமான கோதுமை என்று பிரிக்கப்படுகிறது.

கடினமான கோதுமை பெரும்பாலும் மாவு வகைகளுக்கும் ரொட்டி தயாரிக்கும் பயன்படுகிறது.

பலவீனமான கோதுமை பிஸ்கட் கேக் செய்ய பயன்படுகிறது

**கோதுமையில் உள்ள சத்துக்கள் :**

கோதுமையிலிருந்து இருந்து பல்வேறு உட்பொருட்கள் பிரித்தெடுக்கப்படுகின்றன.

உப பொருட்களை காட்டிலும் முழு கோதுமையில் தான் சத்துக்கள் அதிகம் உள்ளன

கோதுமையில் 13 சதவீதம் நீர் சத்து, 71 சதவீதம் கார்போஹைட்ரேட் மற்றும் 1.5 சதவீதம் கொழுப்பு 13 சதவீதம் புரதமும் உள்ளது.

அனைத்து தானிய தானிய வகைகளில் உள்ளது போலவே, கோதுமையிலும் அதிக அளவு மாவு சத்துக்கள் உள்ளது.

ஸ்டார்ச் தாவர உணவுகளிலிருந்து கிடைக்கும் முக்கிய மாவு சத்து ஆகும். கோதுமையில் உள்ள மொத்த மாவு சத்தில் 90 சதவீதத்திற்கும் அதிகமாக ஸ்டார்ச் உள்ளது.

முழு கோதுமையில் நார்ச்சத்து அதிகம் உள்ளது என்றாலும் சுத்திகரிக்கப்பட்ட கோதுமையில் கிட்டத்தட்ட எதுவும் இல்லை.

**வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள் :**

முழு கோதுமை பல வைட்டமின்கள் மற்றும் தாதுக்களின் சிறந்த மூலமாகும்.

பெரும்பாலான தானியங்களைப் போலவே, அதில் உள்ள சத்துக்களின் அளவு அது வளர்ந்த மண் மற்றும் சூழ்நிலைகளை பொறுத்து மாறுகிறது.

செலினியம் சத்து பல்வேறு அத்தியாவசிய உடல் செயல்பாடுகளை மேம்படுத்த உதவுகிறது கோதுமையின் உள்ள செலினியம் அளவு மண்ணைப் பொறுது மாறுபாடுவதால் சீனா போன்ற நாடுகளில் விளையும் கோதுமையில் உள்ள செலனியம் அளவு குறைவாக உள்ளதாக சொல்லப்படுகிறது.

மாங்கனீசு. முழு தானியங்கள், பருப்பு வகைகள், பழங்கள் மற்றும் காய்கறிகளில் அதிக அளவில் காணப்படுகின்றன. கோதுமையில் உள்ள பைடிக் அமிலம் காரணமாக கோதுமையிலுள்ள மாங்கானீசு சத்து குறைவாக உறிஞ்சப்படலாம். பாஸ்பரஸ் உடல் திசுக்களின் பராமரிப்பு மற்றும் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது. காப்பர் அத்தியாவசிய தாது சத்தாகும். பெரும்பாலும் காப்பர் மேற்கத்திய உணவு முறைகளில் குறைவாக காணப்படுகின்றன. காப்பர் குறைபாடு இதய ஆரோக்கியத்தில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தலாம்.

ஃபோலேட். பி வைட்டமின்களில் ஒன்றான ஃபோலேட் ஃபோலிக் அமிலம் அல்லது வைட்டமின் பி 9 என்றும் அழைக்கப்படுகிறது. கர்ப்ப காலத்தில் இது மிகவும் முக்கியமானது.

கோதுமையின் பல சத்தான பகுதிகள் அவை சுத்திகரிப்பு செய்யப்படும் போது நீக்கப் படுகின்றன.

எனவே, முழு தானிய கோதுமையுடன் ஒப்பிடும்போது வெள்ளை கோதுமையில் பல வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள் குறைந்த அளவே உள்ளன.

உலகில் பெரும்பான்மையான மக்கள் கோதுமையை முக்கிய உணவாக கொண்டிருப்பதால் வைட்டமின்கள் மற்றும் தாதுக்களால் செறிவூட்டப்படுவது அவசிமாகிறது.

பல வளர்ந்த நாடுகளில் கோதுமை மாவு ஊட்ட சத்துக்கலால் செறிவூட்டப் படுவது கட்டாயம் ஆகும்.

செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு மேற்கூறிய சத்துக்களுடன் இரும்பு, தியாமின், நியாசின், கால்சியம் மற்றும் வைட்டமின் பி6 ஆகியவற்றின் சிறந்த மூலமாகும்.

**கோதுமை நன்மைகள் :**

கோதுமை நன்மைகள் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

☛ வயிற்றில் புளிப்புத்தன்மை உடையவர்கள் மற்றும் புளித்த ஏப்பம் அடிக்கடி வருபவர்கள் கோதுமை ரவையை கஞ்சி செய்து குடித்தால் உடனே நிவாரணம் பெறலாம்.

☛ கோதுமை மாவை அக்கிப் புண் நெருப்பு பட்ட இடம் மேல் தோல் உரிந்து போன இடம் ஆகியவற்றில் தடவினாலும் அல்லது வெண்ணெய் கலந்து பூசினாலும் எரிச்சல் தணியும்.

☛ கோதுமை மாவை களியாக செய்து கட்டிகளுக்கு வைத்து கட்ட அவை சீக்கிரம் குணமாகும்.

☛ கோதுமையை உணவில் அதிகம் எடுத்துக் கொள்பவர்களுக்கு உடல் பலம் அதிகரிக்கும். ஆண்களுக்கு ஆண்மை அதிகரிக்கும்.

☛ சம்பா கோதுமையை சாப்பிடும்போது சர்க்கரை வியாதி உள்ளவர்களுக்கு சர்க்கரை அளவு கணிசமாக குறைகிறது. மேலும் மொத்த கொழுப்பு சத்து அளவு மற்றும் ட்ரைகிளிசரைட் அளவும் கணிசமாக குறைகிறது.

☛ காதுமையை முந்தைய நாளே நீரில் ஊற வைத்து காலையில் அடித்து பசையாக்கி அதை மெல்லிய துணியில் இட்டு வடிகட்டி பிழிந்து வருகின்ற பால் கோதுமைப் பாலாகும். இந்த பாலை கப நோயாளிகள் பருக நல்ல பலன் கிடைக்கும்.

கோதுமை என்பது அனைத்து காலத்திற்கும் ஏற்ற உணவு குறிப்பாக இளம் தலைமுறையினர் கட்டாயம் கண்டுகொள்ள வேண்டிய உணவு தான் கோதுமை.

**கோதுமை தீமைகள் :**

கோதுமை பாதுகாப்பானது தான் என்றாலும் சிலருக்கு சில பக்க விளைவுகளை ஏற்படுத்த வாய்ப்புகள் உள்ளன. கோதுமை தீமைகள் .

சிலருக்கு கோதுமையை ஜீரணிக்க முடியாமல், வயிறு உப்புசம், வயிற்றுப்போக்கு போன்ற பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

சிலருக்கு இது ஒவ்வாமையை ஏற்படுத்தும் எனவே குளுட்டன் அலர்ஜி உள்ளவர்கள் கோதுமை மற்றும் கோதுமை பொருட்களை தவிர்க்க வேண்டும்

# காற்று மாசுபாடுகளினால் ஏற்படும் விளைவுகள்



தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கந்தகம் மற்றும் நைட்ரஜன் ஆக்ஸைடு போன்ற வாயுக்களால் ஏற்படுகிற அமிலமழை, மண்ணின் அமிலத் தன்மையை அதிகப்படுத்துவது மட்டும் அல்லாமல் தாவரங்கள் இலைகளை உதிர்த்தல், குளம் மற்றும் ஆறுகளில் உள்ள நீர்வாழ் உயிரினங்கள் பாதிக்கப்படுதல் முதலிய பாதிப்புக்களும் காரணமாகிறது.

காற்று மாசடைதலினால் கண் எரிச்சல், தலைவலி, தொண்டைக்கட்டு, காய்ச்சல் மற்றும் புற்றுநோய் போன்ற பல நோய்களை ஏற்படுகின்றது. தொழிற்சாலைகளும், வாகனங்களும் ஏற்படுத்தும் புகையினால் தாவரங்கள், நிலம், நீர், நினைவுச் சின்னங்கள் மற்றும் கட்டிடங்கள் முதலியவை பாதிக்கப்படுகின்றன.

**அமில மழை** - தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கந்தகம் மற்றும் நைட்ரஜன் ஆக்ஸைடு போன்ற வாயுக்களால் ஏற்படுகிற அமிலமழை, மண்ணின் அமிலத் தன்மையை அதிகப்படுத்துவது மட்டும் அல்லாமல் தாவரங்கள் இலைகளை உதிர்த்தல், குளம் மற்றும் ஆறுகளில் உள்ள நீர்வாழ் உயிரினங்கள் பாதிக்கப்படுதல் முதலிய பாதிப்புக்களும் காரணமாகிறது.



**ஓசோன் படலம்**-வாயுமண்டலத்தின் ஸ்ரடோஸ்பியரிலுள்ள ஓசோன் படலம் சூரியனிலிருந்து வருகிற ஆபத்தான புற ஊதாக்கதிர்களை தடைசெய்கிறது. அதிகவேக விமானங்கள் (சூப்பர் சானிக்) வெளியிடும் அதிகப்படியான நைட்ரஜன் ஆக்ஸைடுகளும், குளிர்சாதனப் பெட்டி, தீயணைப்பான் போன்றவற்றிலிருந்து வெளிவரும் க்ளோரோப்ஃபளோரோ காா்பன்களும் ஓசோன் படலத்தை சிதைக்கிறது. இதன் விளைவாக மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் தோல் புற்றுநோய் ஏற்படுகிறது.

**வாகனங்கள்** - மனிதனின் கண்டுபிடிப்பான வாகனங்கள் நம்மிடம் உள்ள எண்ணெய் சேமிப்பை குறைத்து வாகனங்களிலிருந்து வெளிவரும் புகை (காா்பன் மோனா ஆக்ஸைடு (நைட்ரஜன்) ஆக்ஸைட்டு மற்றும் பிற வாயுகள் காற்றை மாசுப்படுத்திகிறது. இவை, சூரிய கதிர்களுடன் இணைந்து ஒளிவேதி நச்சுப்புகை படலத்தை ஏற்படுத்துகிறது, இது நகரங்களில் பெரிதும் பாதிக்கின்றன.

தொழிற்சாலை மற்றும் வாகனங்களில் இருந்து வெளியேறும் வாயுக்களோ வளிமண்டலத்தில் அமிலத்தன்மையை ஏற்படுத்துகின்றது. இது அமில மழையாக உற்பத்தியாகிறது. இதனால் நிலத்தடி நீர் மாசுடைகின்றது.

**ஒலிச் சீர்கேடு** - ஒலிச்சீர்கேடு நகரங்களில் பாதிப்புக்களை அதிகபடுத்துகிறது. வாகனங்களின் சத்தம், ஒலிப்பெருக்கி ஏற்படுத்தும் இரைச்சல், பொருட்களை விற்போர் கூச்சல், இயந்திரம் ஏற்படுத்தும் உராய்வு சத்தம் போன்றவை மனகவலை, மன அழுத்தம், தலைவலி மற்றும் காது கோளான்மையை ஏற்படுத்துகிறது.



# எரிபொருள் வளங்கள்

**சூரிய சக்தியின் மூலம் உணவு சமைத்தல், நீரைச் சூடாக்குதல், தானியங்களை உலர்த்துதல், சில எந்திரங்களை இயக்குதல் போன்ற பல செயல்கள் நடைபெறுகின்றன. தொல் எரிபொருள்கள் எரியும்போது நைட்ரஜன், கார்பன், கந்தகம் போன்றவற்றின் ஆக்ஸைடுகள் வெளிப்படுகின்றன. இவை வளி மண்டலத்தைப் பெரிதும் பாதிக்கின்றன.**

ஆதிரா

நிலக்கரி, எண்ணெய், இயற்கை வாயு போன்றவை தொல் படிவ எரிபொருள் வளங்களாகும். எண்ணெய் வளத்தைப் பொறுத்தவரை, உலகத்தின் ஒருசில பகுதிகளில்தான் மிகவும் குறைவாகக் காணப்படுகிறது. அதே வேளையில் இவற்றின் பயன்கள் நாளுக்குநாள் பெருகிக் கொண்டே வருகின்றன. தொழிற் பெருக்கம்தான் இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது. தற்போது பயன்படுத்தப்படும் அளவிலேயே பயன்படுத்தப்பட்டால்கூட இருப்பிலுள்ள தொல் எரி பொருள் வளங்கள் முழுதுமாக அழிந்து விரைவில் எரிசக்திப் பற்றாக்குறையை (ளஜஎஷஆதீ உஷஷ்-விஷ்வி) எதிர்நோக்க வேண்டி வருமென்று கூறுகின்றனர். இந்தியாவில் ஏறக்குறைய 131,000 மில்லியன் டன் வரை நிலக்கரி இருப்பதாகவும் தற்போது பயன்படுத்தப்படும் அளவிலேயே பயன்படுத்தப்பட்டால் இன்னும் 1,000 ஆண்டுகளுக்குள் முழுதும் அழிந்துவிடுமென்றும் கணக்கிடப்பட்டுள்ளது. சுத்திகரிக்கப்படாத எண்ணெய் தற்போதைய தேவையில் மூன்றில் ஒரு பங்குதான் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுகிறது. உலகம் முழுதிலும் 95% நிலக்கரி, 4% எண்ணெய், 1% இயற்கை வாயுக்கள் இன்னும் பயன்படுத்தப்படாமல் உள்ளன. உலகில் உள்ள மொத்த எண்ணையும், இயற்கை வாயுக்களும் இந்த நூற்றாண்டு முடிவதற்குள்ளாகவே அற்றுப்போகும் என்று கருதப்படுகிறது.

### எரிபொருள் வளத்தைப் பாதுகாத்தல்

தொல் எரிபொருள் வளத்திற்கு மாற்றாக நீர்மின் சக்தி (hydropower), காற்றுச்சக்தி (wind power), அணுசக்தி (ஐற்உயிளழிஷ ளஜஎஷஆதீ), சூரிய சக்தி (solar energy) போன்றவற்றைப் பயன்படுத்தினால் அதனை அற்றுப்போகும் நிலையிலிருந்து ஓரளவு காப்பாற்றலாம்.

நீர்மின்சக்தி

நீரிலிருந்து மின் உற்பத்தி செய்யும் பல திட்டங்கள் தற்போது நடைமுறையில் இருக்கின்றன. கடல் அலைகளைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யும் திட்டம் ஃபிரான்சிலும், கழிமுக நீரைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யும் திட்டம் இந்தியாவிலும் நடப்பில் உள்ளன.



### காற்றுச்சக்தி

உலகின் பல பகுதிகளில் மிக ஆழமான பகுதியிலிருந்து நீரை வெளிக்கொண்டு வருவதற்கும், எந்திரங்களை இயக்குவதற்கும் காற்றாடிகளைப் (wind mills) பயன்படுத்துகின்றனர். உலகில் உண்டாக்கப்படும் மொத்த சக்தியில் 0.1 மில்லியன் மெகாவாட்தான் இப்போது கிடைக்கிறது என்று கணக்கிடப்பட்டுள்ளது.

### அணுசக்தி

சில உலோகங்களைச் சிதைக்கும்போது பெருமளவில் ஆற்றல் வெளிப்படுகிறது. இச் சக்திக்கு அணு சக்தி என்று பெயர் ஒரு கிராம் யுரேனியம் 235 ஐச் சிதைக்கும்போது வெளிப்படும் சக்திக்கு நிகரான சக்தியைப்பெற 15 டன் நிலக்கரி எல்லாவற்றிற்கும் மேலாக இதில் நிலக்கரியையோ 14 பீப்பாய்கள் சுத்திகரிக்கப்படாத எண்ணெயையோ எரிக்க வேண்டும். யுரேனியம்-238, தோரியம்-232 கடல்நீரில் இருந்து கிடைக்கக்கூடிய டியுட்டிரியம் (-எற்மிளஷஷ்ற்து) போன்ற உலோகங்கள் யுரேனியம் 235 ஐ விட மிகுந்த சக்தியைக் கொடுக் கும். இந்தியாவில் காணப்படும் பல கனிமங்களில் தோரியம் அடங்கியுள்ளது. இதைப் பயன்படுத்தி வருங்காலத்தில் ஏற்படும் சக்தி பற்றாக்குறையைப் போக்கிவிடலாமென்று அணுசக்தி அறிஞர்கள் கருதுகின்றனர். இந்தியாவில் தாராப்பூர் (பம்பாய்), கோட்டா (இராஜஸ்தான்), கல்பாக்கம் (தமிழ்நாடு) போன்ற இடங்களில் அணுமின் நிலையங்கள் நிறுவப்பட்டு இயங்கி வருகின்றன.


### சூரியசக்தி

சூரிய சக்தியின் மூலம் உணவு சமைத்தல், நீரைச் சூடாக்குதல், தானியங்களை உலர்த்துதல், சில எந்திரங்களை இயக்குதல் போன்ற பல செயல்கள் நடைபெறுகின்றன. தொல் எரிபொருள்கள் எரியும்போது நைட்ரஜன், கார்பன், கந்தகம் போன்றவற்றின் ஆக்ஸைடுகள் வெளிப்படுகின்றன. இவை வளி மண்டலத்தைப் பெரிதும் பாதிக்கின்றன. இதேபோல் அணுசக்தியை உண்டாக்கும் போதும் சில கேடுபயக்கும் பொருள்கள் வெளிப்பட்டு வளிமண்டலத்தைப் பாதிக்கின்றன. ஆனால் புதுப்பிக்கக்கூடிய காற்று, நீர், சூரிய வளங்களால் எவ்வித நிலையான கேடுகளும், சிக்கல்களும் ஏற்படுவதில்லை. எனவே இச்சக்தியைப் பயன்படுத்தி சூழ்நிலை கேடுறுவதைத் தடுக்கலாம்.

மக்கள் சமைப்பதற்கும் எரிப்பதற்கும் விறகுகளையும், காய்ந்த மாட்டுச்சாணத்தையும் எரிபொருளாகப் பயன்படுத்தி வருகின்றனர். மாட்டுச் சாணத்தை எரிபொருளாகப் பயன்படுத்துவதால் தாவரங்களுக்குத் தேவையான இயற்கை உரம் கிடைக்காமல் போய்விடுகிறது. இக்குறையைப் போக்கச் சாண எரிவாயுக் கலன்களை (gobar gas plants) அமைத்து, மாட்டுச் சாணத்தைப் பயன்படுத்திச் சாண எரிவாயுவை (biogas or gobar gas) உண்டாக்கி, விளக்கு எரிப்பதற்கும், சமைப்பதற்கும், பொருள்களைச் சூடாக்குவதற்கும் பயன்படுத்தலாம். இதனால் எரிபொருள் செலவு குறைந்து விடும். தூய்மைக் கேடுகளும் இல்லை. மேலும் விறகுகளுக்காகக் காடுகளை அழிப்பதும் தவிர்க்கப்படுகிறது. பயன்படுத்தப்படும் சாணத்தைப் பயிர்களுக்குத் தேவையான உரமாகவும் பயன்படுத்தலாம்.

# மருதம் பசுமை நகர்
## Marutham Green City

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்




0777 43 55 57

# பரம்பரைக்குக் கடத்துவது

கூலி கொடுப்பதற்கு கோடிபணம்
வேண்டுமென்றும்
கூட்டிப் பெருக்குதற்கு குனிந்தெழும்ப
வேண்டுமென்றும்
வேலிக் கதியாலை வேரோடு
பெயர்த்துவிட்டு
வேலிக்குத் தகரமிட்டோம்
வெய்யிலுக்கு வாய்ப்பளித்தோம்
மதிலே மதிப்பென்று மயக்கத்தில்
ஆழ்ந்துவிட்டோம்
பள்ளிக்குச் சென்றுவந்த பருவப்
பொழுதுகளில்
அள்ளும் அடிச்சூட்டை அருகுவேலிக்
கதியால்கள்
மெள்ளக் குறைத்ததனை மேதினியில்
மறந்துவிட்டோம்

வேலி கழற்றி, வெள்ளாமை
வயலுக்குள்
வெட்டிப் புதைத்ததனால்
விறுவிறெனப் பயிர்வளரல்
கண்டு களித்த கடைசிப் பரம்பரைநாம்

தழைச்சத்தும் மணிச்சத்தும்
இலைகுழையில்
இருக்குதென்ற
தாற்பரியம் மறந்துவிட்டோம்
அவரைப் பயிரினங்கள் அருகினிலே
இருப்பதனால்
உயர இருக்கும் நைதரசன்
கீழிறங்கும்.
எவரைப் பார்த்துத்தான் எட்டி
உதைத்தோமோ
இப்போ துழல்கின்றோம்

'பொட்டாஸ்' உரம்உமியைப்
போட்டெரித்தால்
கிடைத்துவிடும்
அதற்காக
கட்டாகக் காசை கரியாக்கப் பழகிவிட்டு
மட்டில்லா விலைக்கு மலையேறிப்
பெற்றுவந்தோம்

இப்படித்தான்.....
கூலி கொடுப்பதற்கு கோடிபணம்
வேண்டுமென்றும்
கூட்டிப் பெருக்குதற்கு குனிந்தெழும்ப
வேண்டுமென்றும்
வேலிக் கதியாலை வேரோடு
பெயர்த்தெறிந்து
வேலியிலே ஓர்கிளையில்
கூவிக் கொண்டிருந்த குயிலைத்
துரத்திவிட்டு
குயில்ப்பாட்டின் மகத்துவத்தைக்
குறிப்பெடுத்துக் குறிப்பெடுத்து
பயிலில் அடுக்கிவைத்துப்
பரம்பரைக்குக் கடத்துகிறோம்.

**கவிஞர் வ. வடிவழகையன்**

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.02.2025 இல் வெளியிடப்பெற்றது.